# மேற்கு ஆஸியா அமைதிக்கு நான்கு வல்லரசு பூர்வாங்க மாநாடு;

Registered as a News paper in Ceylon விலை சதம் 15

★

# ஈழநாடு

EELANADU

மலர் 11

தபால்பெட்டி எண்: 49

இதழ்:53

போன்: 389

National Tamil Daily

தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 22 முஹறம் 16 வெள்ளிக்கிழமை [4-4-69




வாஷிங்டன், ஏப். 3

மேற்கு ஆசியாவில் அமைதி ஏற்படுத்துவதற்கான நான்கு வல்லரசு பூர்வாங்க மகாநாடு இன்று ஆரம்பமாகிறது.

ஐ நா.வில் நான்கு வல்லரசுகளின் நிரந்தரப் பிரதிநிதிகள் இன்று பிரஞ்சு அலுவலகத்தில கூடிப் பேசுகிறார்கள். இந்தப் பேச்சுகள் எலலா நான்கு வலலரசு அலுவலகங்களிலும் மாறி மாறி நடைபெறும். சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளின் ஐ. நா. பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில கலந்துகொள்கின்றனர்.

## மாணவிகள் வசதிக்கு

உடுவில், வியாழன்

இராமநாதன் கல்லூரி மாணவிகளின் வசதியை முன்னிட்டு மேற்படி கல்லூரி வாசலில் யாழ்ப்பாணம் நோக்கியும் காங்கேசன்துறை நோக்கியும்செல்பவர்களுக்கென பஸ்தரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

உடுவில் கிராமசபைத் தலைவர் திரு. எஸ். முத்துலிங்கம் இதற்கான முயற்சியை மேற்கொண்டிருந்தார்.

## 'பதவியை ராஜிநாமாசெய்து போராட்டம் நடாத்துவோம்'

### கருணாநிதி எச்சரிக்கை

மதுரை, ஏப் 3.

''மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று டில்லி அரசாங்கத்தை வற்புறுத்துவோம். எங்கள் கோரிக்கை ஏற்கப் படாவிட்டால பதவியை ராஜினாமா செய்துவிட்டு போராட்டம் நடத்துவோம்'' என்று முதலஅமைச்சர் கருணாநிதி டில்லிக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்

மாநிலங்களுக்கு டிலலி அரசாங்கம் அதிக அதிகாரம் கொடுக்கவேண்டும் என்று தமிழகமுதலமைச்சர் கருணாநிதி வற்புறுத்தி வருவது தெரிந்ததே.

இதுபற்றி இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புணரியில நடந்த பொதுக் கூட்டத்தில கருணாநிதி பசியதாவது:-

நமது மாநில சுய ஆட்சி கோரிக்கை, மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதுதான். இதை நாம் சொல்லும் போது, டில்லியிடம் இருந்து அதிகாரங்களை பிடுங்குவதற்கு போராடுவதாக தவறாக எண்ணக் கூடாது.

அவர்களுடைய பாரத்தில அவர்களுடைய துன்பத்தில நாமும் பங்கு கொள்வோம் என்பதற்காகத்தான் இதை எடுத்துச் சொலகிறோம்.

மனித உடம்புக்கு மூளை தான் பிரதானம். மனிதன் நடக்க, உட்கார, கைகால்களை அசைக்க மூளையின் உத்தரவை எதிர்பார்க்க வேண்டியது இலலை. சிந்தித்து எடுக்க வேண்டிய முடிவுகளுக்கு மூளையின் உத்தரவுக்காக காத்து இருக்கலாம்

மத்திய சர்க்கார் மூளை என்று வைத்துக் கொண்டால, மாநில சர்கார்களை மூளையில இருந்து பிரியும் நரம்பு மண்டலமாக எண்ணலாம்.

தானாக இயங்கக்கூடிய காரியங்களுக்கு நரம்பு மண்டலம் எப்படி மூளையின் உத்தரவுக்காகக் காத்து இருக்கவேண்டியது இலலையோ, அதேபோல தானாக இயங்கக்கூடிய காரியங்களுக்கு மத்திய அரசாங்கம் உத்தரவுக்காக காத்து இருக்கவேண்டியது இலலை.

மாநிலத்தில தொழிற்சாலை அமைப்பதற்கு இடம், மின்சாரம், நீர் மற்றும்

ஐ. ஜி. பி உத்தரவு

# எறிகுண்டு வைத்திருந்தால் பத்து வருடம் சிறை

## அட்டோர்ணி ஜெனரல் உத்தரவு வேயே பிணை

யாழ்ப்பாணம்,. வெள்ளி

எறிகுண்டு போன்ற அபாயம் விளைவிக்கக்கூடிய பொருட்களை உத்தரவின்றி தயாரிப்பாளர்கள்,கொண்டு செல்பவர்கள், விநியோகிப்பவர்களை உடனடியாகக் கைதுறிமாண்டில் வைக்குமாறும், அட்டர்னி ஜெனரலிடம் உத்தரவுபெற்று உயர்நீதிமன்றத்தின் பிணையிலேயே அவர்களைச் செல்ல அனுமதிக்கவேண்டுமென்றும் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜெனரல் வடபகுதி பொலிஸ்சுப்பிரிண்டனுக்கு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அச்சத்தையும் நீக்கவே பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1966-ம் வருட 18-வது ஆயுத உபயோகத் தடுப்பு சட்ட நடவடிக்கையின் கீழ் இவ்வகையான அபாயம் பொருட்களை வைத்திருப்பவர்களைக் கைதுசெய்தால் சுமார் 4 மாதங்கள் வரை எந்த நியதியுமின்றி ரிமாண்டில் வைக்கலாமென்றும் இந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய இப் பொருட்களை வைத்திருப்பவர்களை சுப்ரீம் நீதிமன்ற



## இரத்தினபுரி மாநகரசபை தீர்மானம்:

# 'நாம் தமிழர் இயக்கம் தடை செய்யப்பட வேண்டும்'

இரத்தினபுரி, வியாழன்

'நாம் தமிழர்' இயக்கத்தைத் தடை செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் இரத்தினபுரி மாநகரசபையில் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளது.

மாநகரசபை அங்கத்தவர் திரு. ஓ. எஸ். பெரோரா இத்தீர்மானத்தைச் சபையில் கொண்டுவந்திருந்தார். மேயர் திரு. ஆர். ஏ. திலகரத்தின தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

நாட்டின் ஐசகியத்துக்கும் ஒற்றுமைக்கும்'நாம்தமிழர், இயக்கம் ஒரு தடையாகவுள்ள தென்று இரு. பி. சமரவீரா குறிப்பிட்டார்.

திருவாளர்கள் பி. டி. கருணரத்தின மேயர் திரு. திலகரத்தின ஆகியோர் 'நாம் தமிழர்' இயக்கத்தை வன்மையாகத் தண்டித்துப் பேசினர்.

## இலங்கையில் பிளாக்டிக்னம் பேனைகள் உற்பத்தியாகும்

கொழும்பு, வியாழன்

உலகப் பிரபல்யம் பெற்ற ஊற்றுப்பேனையான பிளாக்டிக்னம் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட விருக்கிறது. ''கொழும்பு இன்டஸ்றியல் ஏஜென்ஸி'' ஸ்தாபனத்தார் இந்தப் பிளாக்டிக்னம் பேனைகள் உற்பத்தி செய்வார்கள்.

பிளாக்டிக்னம் பேனைகளை உற்பத்தி செய்துவரும் பிரபல பிரிட்டிஷ் வர்த்தக நிறுவனமாக மென்ட்மோர் கம்பனியுடன் கொழும்பு இன்டஸ்றியல் ஏஜென்ஸி இங்கிலாந்தில் கிடைக்கக் கூடிய அமைப்புகளைக் கொண்டதாக இவை உருவாக்கப்படும். கொழும்பு இன்டஸ்றியல் ஸ்தாபனத்தாரின் ஜா-எலையிலுள்ள தொழிற்சாலையில் இப்போது ஒரு நவீன இயந்திரப்பொறி நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இந்த நவீன இயந்திரம் சிறந்த ரகமான இந்தப் பேனைகளை பெருமளவில் உற்பத்தி செய்யும் ஆற்றல் படைத்தது.

## இலக்கிய அரங்கு

உடுப்பிட்டி, வியாழன்

வதிரி தேவரையாளி பிளாஷ் விளையாட்டுக்ககழகத்தினரால மாதம் தோறும் இலககிய அரங்கு நடாத்தப்பட்டு வருகின்றது. இம்மாத இலக்கியக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை திரு வ. சிவராசன் தலைமையில நடைபெறவிருக்கின்றது. திரு. தம்பையா இலக்கியச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

## தமிழ்நாட்டில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



செல்வி வசந்தகுமாரி முத்துக்குமாருவின் அபிநயத்தோற்றம் ஒன்று. இம்மாதம் 23-ந் திகதி யாழ். நகர மண்டபத்தில் இவரது நாட்டிய நிகழ்ச்சி நடைபெறுகிறது.

## ஒன்றரை லட்ச பெறுமதியான சேலைகள் கைப்பற்றப்பட்டன

யாழ்ப்பாணம், புதன் ஊர்காவற்றுறைக் கடலில் வைத்து ரூபா ஒன்றரைலட்சம் பெறுமதியான கடத்தல் பொருட்களை கடற்படையினர் கைப்பற்றினர்.

வல்வெட்டித்துறைப் பொலிசாருக்குக் கிடைத்த இரகசிய தகவலைத் தொடர்ந்து காரைநகர் கடற்படையினரின் உதவியுடன் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இயந்திரப்படகையும் விலையுயர்ந்த சாறிகளையும் கைப்பற்றிய பொலிசார் இது சம்பந்தமாக 7 பேரையும்கைதுசெய்தனர். விசாரணை தொடர்கிறது.

(இமை. நி.[

## ஆங்கில, சிங்கள ஒலிபரப்புகளில் மாற்றம்

கோட்டை, வியாழன் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் சிங்கள, ஆங்கில ஒலிபரப்புகளில் இன்றுமுதல் மாற்றம்செய்யப்பட்டுள்ளது.

சிங்கள வர்த்தக சேவை இன்றுமுதல் காலை ஆறுமணி ஆரம்பமாகும். 6-30 மணிக்கு சிங்களத்திச்செய்தி அறிக்கையும், 7 மணிக்கு சிங்களத்தில் தலைப்புச்செய்திகளும் ஒலிபரப்பப்படும்.

மற்றைய நேரங்களில் செய்திகள் ஒலிபரப்பும் நேரங்களில் மாற்றம் செய்யப்படவில்லை.

ஆங்கிலசெய்தி அறிக்கை காலை 7மணிக்கும் ஆங்கிலத்தில் தலைப்புச் செய்திகள் காலை 7-30 மணிக்கும் ஒலிபரப்பப்படும்.

சிங்கள ஒலிபரப்பில் மாலை 6-15 மணிக்கு கிராமசேவையொன்றும் இன்று மாலை ஆரம்பித்து வைக்கப்படும், இச்சேவை இரவு 7-30மணி வரை நீடிக்கும்.

## மதியழகன் கலந்துகொள்வார்

சென்னை, ஏப்ரல்2

புதுடில்லியில் நடைபெறவிருக்கும் ராஜ்ய முதலமைச்சர்கள் மாநாட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு. கருணாநிதிசார்பில் அமைச்சர் மதியழகன் கலந்துகொள்வார் என அறிவிக்கப்பட்டது,

## வங்கியில் கொள்ளை

கல்கத்தா, ஏப்ரல்2

கல்கத்தாவில் ஆயுதந்தாங்கிய கொள்ளைக் கோஷ்டியொன்று வங்கியொன்றுள் புகுந்து ஒரு லட்சத்து 23 000ரூபாவை களவாடிச் சென்றுள்ளது என்றும் கொள்ளைக்கோஷ்டி இதுவரை கைது செய்யப்படவில்லையென்றும் அறிவிக்கப்பட்டது.

## புதுடில்லியில் லெஸ்டர் பியர்சன்

புதுடில்லி, ஏப்ரல்2

கனடா முன்னாள் பிரதம மந்திரி திரு. லெஸ்டர் பியர்சன் சர்வதேச அபிவிருத்தி கமிஷனைச் சேர்ந்த இரண்டு பிரதிநிதிகளுடன் இன்று காலை புதுடில்லிக்கு வந்து சேர்ந்துள்ளார்.

---

டா ஜெனரல் வடபகுதி பொலிஸ்சுப்பிரிண்டனுக்கு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளார்.

எறிகுண்டு வைத்திருந்ததாகக்கைதுசெய்யப்பட்ட ஒருவர் நீதிமன்றத்தில் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவருக்கு 10 வருட சிறைத்தண்டனையோ அல்லது 10,000 ரூபா அபராதமோ விதிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் எறிகுண்டு வீச்சுச் சம்பவங்கள் சாதிப் பிரச்னையை முன்வைத்து அதிகரித்துவருவதால் இதனால் பொதுமக்களிடையே ஏற்பட்டுவரும் பீதியையும், பொதுமக்களுக்கு அபாயம் விளைவிக்கக்கூடிய இப்பொருட்களை வைத்திருப்பவர்களை சுப்ரீம் நீதிமன்ற உத்தரவின் பின்னரே பிணையில் விடுதலைசெய்யவேண்டுமென்றும் அதன் பின்னரும் இவர்களது நடமாட்டத்தில் தீவிரகண்காணிப்புச் செலுத்த வேண்டுமென்றும் பொலிஸ் சுப்பிரிண்டன்ட், பொலிஸ் தலைமைக்காரியாலயத்தால் வேண்டப்பட்டுள்ளார். இந்த உத்தரவை வடபகுதியிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும், பொலிஸ்சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுக்காலை அறிவித்தார்.

கா. நி)

---

யாழ்- நகரில்

## ரூ. 5 000 செலவில் சிறுவர் பூங்கா

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணத்தில் சிறுவர் பூங்கா அமைப்பதற்கான வேலைகள் இப்போது துரிதமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண நகரிலுள்ள சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு அம்சங்களைக் கொண்டதாக இந்த பூங்கா அமைக்கப் படுமென யாழ். நகர முதல்வர் திரு. எஸ். நாகராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவுக்கும், யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கும் இடைப்பட்ட காணியில் சிறுவர்பூங்கா நிறுவப்படும்.

இதற்கென சுமார் 5000 ரூபா செலவாகும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

(கா. நி)

## நாகபட்டினத்துக் கருகில் இலங்கை படகுபிடிபட்டது

யாழ்ப்பாணம், வெள்ளி பொருசாருக்கும் கடற்படையினருக்கும் சிக்காமல் வேகமாகச் சென்று மறைந்ததாகத் தெரிவிக்கப்பட்ட புதிய இயந்திரப் படகொன்றை வல்வைக் கரையிலிருந்து வெகு தொலைவுக்கப்பால் நாகபட்டினத்துக்கு அண்மையில் கடலில் வைத்து கைப்பற்றினார்களாம் வல்வெட்டித் துறைப் பொலிசார்.

பொலிசுக்குக் கிடைத்த இரகசிய தகவல் ஒன்றைத் தொடர்ந்து கடற்படை படகொன்றில் சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜெயசிங்கா தலைமையில் ஆயுதங்களுடன் சென்ற பொலிஸ் படையினரே இந்த வள்ளத்தைக் கைப்பற்றியவர்களாவர்.

ஏழு பேருடன் கைப்பற்றப்பட்ட இந்தப் புதிய வள்ளத்தில் 15 மூடைகள் நிரம்ப சுமார் 2 லட்சம் ரூபா பெறுமதியான கள்ளக்கடத்தல் ஜவுளிகள் இருக்கக் காணப்பட்டதாக வடபகுதி பொலிஸ் தலைமைக்காரியாலயத்தில் தெரிவிக்கப்பட்டது. இவ்வள்ளம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவருக்குச் சொந்தமானதெனவும் பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளதாம்.

கைது செய்யப்பட்டவர்களையும், வள்ளத்தையும், பொருட்களையும் பொலிசார் யாழ்ப்பாணம் சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைத்துள்ளனர். சுங்க சப் கலெக்டர் திரு. சேனரத்ன விசாரணை நடத்தி வருகின்றார்.

(கா. நி,)

---

உற்பத்தி செய்துவரும் பிரபல பிரிட்டிஷ் வர்த்தக நிறுவனமாக மென்ட்மோர் கம்பனியுடன் கொழும்பு இன்டஸ்றியல் ஏஜென்ஸி ஸ்தாபனத்தார் செய்து கொண்டுள்ள பங்கு ஒப்பந்தம் ஒன்றின் பயனாகவே இந்தப் புகழ்வாய்ந்த பேனைகள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படவிருக்கின்றன.

மென்ட்மோர் கம்பனியின் நிர்வாக அதிபரான திரு. ஏ. ஈ. அன்ட்ரூஸ் சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்து இந்த உடன்பாட்டிற்கு அங்கீகாரம் வழங்கினார். இந்த ஒப்பந்தத்தின் கீழ் கொழும்பு இன்டஸ்றியல் ஸ்தாபனத்தார் பிளாக்டிக்னம் ஊற்றுப் பேனைகளை மட்டுமன்றி, பிளாக்டிக்னம் கூர்முனைப் பேனைகளையும் உற்பத்தி செய்வார்கள்.

மேற்படி பிளாக்டிக்னம் ரகப் பேனைகள் இவ்வருட இறுதியில் இலங்கைச் சந்தைக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது. இன்று ... பெருமளவில் உற்பத்தி செய்யும் ஆற்றல் படைத்தது.

... வார்.

---

தமிழ்நாட்டில்

## பின்தங்கிய மக்களுக்காக புதிய இலாகா

சென்னை, ஏப். 3

தமிழ் நாட்டில் பின்தங்கிய வகுப்பு மக்களின் நலன்களைக் கவனிப்பதற்கென புதிய இலாகாவொன்று ஏற்படுகின்றது.

இப்போதிருக்கும் ஹரிசன நலன்களைக் கவனிப்பதற்கான இலாகா இரண்டாகப் பிரிக்கப்பட்டு இதன் ஒருகிளை பின்தங்கிய மக்களின் நலன்களைக் கவனிப்பதாக அமையும். இக்கிளை முதலமைச்சர் திரு. மு. கருணாநிதியின் பொறுப்பில் இயங்கும். இதற்கென ஒரு புதிய டைரக்டரும் இதர அதிகாரிகளும் நியமிக்கப்படுகின்றனர். இந்த இலாகா விசேஷமாகத் தேவைப்படுவதின் காரணமாகவே நிறுவப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஹரிஜன நலன்களைக் கவனிக்கும் இலாகா திருமதி சத்தியவாணிமுத்துவின் பொறுப்பிலேயே இருந்து வரும்.

## புகையிலை வரியா! ரூபா 30கோடி

கோட்டை, புதன் கடந்தவருடம் புகையிலை வரியாக 30 கோடி அறவிடப்பட்டுள்ளதாகவும், இத்தொகை 1967ம் ஆண்டைவிட 10 கோடிரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும்அதிகரிக்கப்பட்டுள்ளது.

---

உத்தரவுக்காக காத்து இருக்கவேண்டியது இல்லை.

மாநிலத்தில தொழிற்சாலை அமைப்பதற்கு இடம், மின்சாரம், நீர் மற்றும் எல்லாவசதிகளையும் மாநில அரசாங்கம் செய்து தர வேண்டும்.

அந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் தருவதற்கு மட்டும் டில்லிக்கு அதிகாரம் இருக்கிறது. 4 தொழிற்சாலைகள் மத்திய அரசு லைசென்சை எதிர்பார்த்து இயங்குவதற்கு காத்து இருக்கின்றன.

இந்தத் தொழிற்சாலைகளுக்கு லைசென்ஸ் வழங்கும் விஷயம் என்ன ஆயிற்று? என்று டில்லிக்குப் போய் நானும், அமைச்சர் மாதவனும் கேட்டதற்குப் பிறகு நாலில ஒன்றுக்கு லைசென்ஸ் தரப்பட்டிருப்பதாக கடிதம் மூலம் நமக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட அதிகாரங்கள் கூட மாநிலங்களுக்குக கிடையாது. மாநில சுய ஆட்சி கோரிக்கைமதிக்கப்படவேண்டும் இதற்காக முதலில போராட மாட்டோம்- வாதாடுவோம்.

அது வெற்றி பெறாவிட்டால போராட்டத்தில குதிப்போம்.

அதாவது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்படவில்லையானால பதவியை ராஜினமா செய்து விட்டு போராட்டம்நடத்துவோம்.

இவ்வாறு கருணாநிதி கூறினார்.

(ந. நி.)

---

அல்வாய் ஆலயப்பிரவேச விவகாரம்'

## வெகுஜன இயக்கம், புரட்சிகரவிடுதலை முன்னணி கூட்டாக ஈடுபடும்

உடுப்பிட்டி, வியாழன் அல்வாய் வடக்கு வியாபாரிமூலை ஸ்ரீ வீரபத்திரர் கோவில் ஆலயப்பிரவேசத்தில் புரட்சிகர சமசமாஜ விடுதலை முன்னணியும். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் சேர்ந்து கூட்டாக ஈடுபடுவதென்றும், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய விவகாரம் முடிந்தபின்னரே அல்வாய் வீரபத்திரர் ஆலயப்பிரவேச முயற்சி மேற்கொள்ளப்படுமென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

சென்ற சனிக்கிழமை அல்வாய் வடக்கில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப்பட்டது புரட்சிகர சமசமாஜ விடுதலை முன்னணியின் வடமராட்சிக் கிளைக் காரியதரிசி திரு. விவேகானந்தன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் பிரமுகர்களான திரு. எப். போஷியா, திரு. எஸ், கணேசன், புரட்சிகர சமசமாஜக்கட்சிப் பிரமுகர் திரு. மல்லவராய்ச்சி ஆகியோர் கலந்து கொண்டனர். வடபகுதியில் ஆலயப்பிரவேச முயற்சிகளை நேரில் பார்வையிடுவதற்கெனத் தென்னிலங்கையிலிருந்து வந்திருந்த திரு மல்லவராய்ச்சி அல்வாய் வீரபத்திரர் ஆலயத்தில் ஆலயப்பிரவேசம் தொடர்ந்து நடைபெறவேண்டுமென இக்கூட்டத்தில் வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கப் பிரமுகர் திரு. எப். போஷியா பேசுகையில், ''பல கோவில்களில் ஒரேநேரத்தில ஆலயப்பிரவேசம் செய்வது ஒருபோதும் வெற்றியைத் தராது. படிப்படியாக ஒவ்வொரு கோவிலகளிலும் எவ்வித இயக்க வேறுபாடும் இன்றி ஆலயப்பிரவேசம் செய்வதின்மூலமே எமது போராட்டம் பூரணவெற்றி பெறமுடியும். முன் யோசனையின்றித் தனியொரு கட்சியாக இயங்கினால் எந்த ஒரு முயற்சியும் நலல பயனைத் தராது. இதற்கு அலவாய் வீரபத்திரர் ஆலய விவகாரம் ஒரு உதாரணமாகும்'' என்று கூறினார்.

அவர் மேலும் பேசுகையில, ''வீரபத்திரர் கோவில பிரமுகரான திரு, மயிலவாகனம் கோவிலசெலவு 500 ரூபாவும் தந்து, கோவில பொறுப்பையும் எற்று நடத்தச் சிறுபான்மை இயக்கங்கள் தயாரானால ஆலயக்கதவுகளைத் திறந்துவிடத் தயாராக இருப்பதாகவும், ஆலயச் சாவியைத் தருவதாகவும் அறிவித்துள்ளார். ஆனால நம் ஒருபோதும் அவரதுகோரிக்கையை ஏற்க மாட்டோம். நிச்சயம் ஆலயப்பிரவேசம் செய்தே தீருவோம். அல்வாய் வீரபத்திரர்கோவில பரிபாலனத்துக்கும் திரு. மயிலவாகனத்துக்கும் எவ்வித தொடர்புமிலலை, அவருடன் பேச்சுவார்த்தை நடாத்த நாம் தயாராயிலலை.

கோவில் தர்மகர்த்தா திரு. பாலசுப்பிரமணியத்துடனே நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம் ஆனால் நிபந்தனையற்ற முறையிலேயே எமது உரிமைகளுக்காகப் போராடுவோம்'' என்று குறிப்பிட்டார்.

ஆலயப்பிரவேச முயற்சியைத் தொடர்ந்து பிரஸ்தாப கோவில கதவுகள் மூடப்பட்டுள்ளன. கடந்த மாதம் 24-ம் திகதி முதல கோவிலில எவ்வித பூசைகளும் நடைபெறவிலலை.

## கத்திக்குத்து

சுழிபுரம், வியழன் சித்தங்கேணியைச் சேர்ந்த ஒருவர் சங்கானைப் பொலிஸ் நிலையத்துக்கருகாமையில் கத்திக்குத்துக்குள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்சம்பவம் நேற்று இரவு நடைபெற்றுள்ளது.

கத்திக்குத்துக்குள்ளானவர் தற்போது யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த இருவரில் ஒருவர் இவரை கத்தியால் குத்தியதாகக் கூறப்படுகிறது.

சங்கானைப் பொலிசார் சந்தேக நபர்களைத் தேடி வருகின்றனர்.

---

அல்லைப்பிட்டி, வியாழன் இம்மாதம் 16-ம், 17-ம் திகதிகளில் நயினாதீவில் கலைவிழாவொன்று நடைபெற இருக்கின்றது. இவ்விழாவை நயினாதீவு மணிபல்லவ கலாமன்றத்தினர் நடாத்தஉள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் சந்தியில் இ. போ. ச. டிப்போவிற்கு எதிராக 2 பரப்பு கட்டிடத்துண்டு. எழுத்து மூலம் தொடர்பு கொள்ளவும். எஸ். கதிர்காமலிங்கம், வழக்கறிஞர் அன்ட் நொத்தாரிசு, 381, டாம் வீதி, கொழும்பு. தொலைபேசி: காரியாலயம் 22389 இருப்பிடம்: கல்கிசை 7531 903

எனது தொழிற்சாலையிலுள்ள சகல ஆயுதங்களும் இரும்புச் சாமான்கள் மின்சார வெல்டிங் மிசின்கள் யாவும் விற்பனைக்கு உண்டு. விரும்புவோர் 7-ந் திகதிக்கு முன் நேரில் தொடர்பு கொள்ளவும். க. சுப்பிரமணியம், சந்திரா எலெக்றிக் வெல்டிங் தொழிற்சாலை, 105, அத்தியடி அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம். 904

காணி:

மிருசுவில், தவசிகுளம் வீதியிலுள்ள மாமரங்கள், தென்னைமரங்கள் நிரம்பிய 11 பரப்புக் காணி விற்பனைக்கு உள்ளது. வீடுகட்டுவதற்குச் சிறந்த இடம். கோவில், அரசினர் பாடசாலை ஆகியவற்றிற்கு அருகாமையிலுள்ளது. கண்டி வீதி, அரசினர் வைத்தியசாலை 200 யாருக்குள் இருக்கிறது. விபரங்களுக்கு: அ. சூசைப்பிள்ளை, தவசிகுளம், மிருசுவில். 906

முட்டை இடும் கறுப்புக் கோழிகள் Ex. Nel Farm, மற்றும் ஒரு மாதச் சேவற் குஞ்சுகளும் பேட்டுக் குஞ்சுகளும் உடனடியாக விற்பனைக்குண்டு. பிரணவப் பண்ணை, கந்தரோடைவீதி, சுன்னுகம். 910

## கல்வி

காலை, மாலை வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஜீ சீ. ஈ. சாதாரணம் கலை/விஞ்ஞானம்/ வர்த்தகம், மனையியல். ஜீ. சீ. ஈ. உயர்தரம் கலை/ வர்த்தகம், ஜீ. ஏ. கியூ. சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம். விசேஷ ஆங்கிலம், சிங்களம். விடுதி வசதி உண்டு. தாமதிக்காது விண்ணப்பிக்கவும். ஏப்பிரல் 18ம் திகதி வகுப்புகள் ஆரம்பமாகின்றன. யுனைடெட் மகளிர் கல்லூரி, 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 909

### அரசாங்கக் கேள்விகள்

நீர்ப்பாசனத் திணைக்களம் என். 4366- நீர்ப்பாசன இலாகா வவுனியா உபபிரிவில் கொத்தன்குளவெட்டு வேலைக்கும் பெரியகட்டுக்குள வெள்ள அழிவுத் திருத்த வேலைகளுக்குமான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்கட்கு 1969-4-3 ஆந் திகதி வெளிவந்த அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

G. P. 2630

## கல்வி

சாலை, மாலை வகுப்புகளுக்கு பிரவேசங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன ஜீ. சி. ஈ. சாதாரணம். கலை விஞ்ஞானம்/ வர்த்தகம் மனையியல். ஜீ. சி. ஈ. உயர்தரம்: கலை, வர்த்தகம்' ஜீ. ஏ. கியூ சுருக்கெழுத்து, தட்டச்சு, கணக்கியல், வர்த்தகம், விசேஷ ஆங்கிலம், சிங்களம். யுனைடெட் இன்ஸ்டிடியூஸ், நெல்லியடி; கரவெட்டி. 908

மாணவர்களுக்கு விஞ்ஞான பாடங்கள் வீடுகளில் டியூஷன் சொல்லித்தரப்படும். யுனைட்டெட் இன்ஸ்டிடியூட்ஸ், 107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 907

# 5-வது ஆண்டு நிறைவுவிழா

குரும்பசிட்டி, வியாழன்

யாழ். மாநகரசபையினரின் பௌர்ணமி கலைவிழாவின் 5-வது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 29-5-69 முதல் 31-5-69 வரை மூன்று நாட்களுக்கு சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கின்றது. பாமர மக்களிடம் நாடகக் கலை உணர்வை வளர்க்க உதவும் வகையில் பாடசாலைகளின் நாடகங்கள் முதல்இருநாட்களிலும், மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் கதம்ப நிகழ்ச்சிகளாவும் நடைபெறவிருப்பதாக மாநகர ஆணையாளர் திரு. ஏ. ரி. சுந்தரம் தெரிவித்துள்ளார்.

# நீச்சல் தடாகங்கள்

கோட்டை, வியாழன்

விளையாட்டமைச்சர் திரு. சுகததாசா நாட்டில் உள்ள 30 நகரங்களில் நீச்சல் தடாகங்கள் அமைப்பதற்குத் தீர்மானித்துள்ளார். மக்கள் தங்கள் உயிரைக் காப்பாற்றுவதற்கு நீச்சலைப்பயில அமைக்கப்படும் இந்த தடாகங்கள் ஆறுகள், நீரோடைகள், குளங்கள் ஆகிய நீர் நிலைகளுக்கு அருகாமையில் அமைக்கப்

# இன்றைய பலன்

4-4-69

வெள்ளிக்கிழமை

திதி- துதியை இரவு 10-01 மேல் திருதியை.

நட்சத்திரம்- சித்திரை காலை 6-50 மேல் விசாகம்.

ராகுகாலம்- 10-40 12-10.

சுபநேரம்- 6-10 — 7-40.

இன்று பிறந்தவர்களுக்கு— தனியார்துறையில் தொழில்புரிவோர்க்கு தனவரவும், புதுத் தொழில் நாட்டம், பொருள்சுகம் உண்டு. நீண்டபிணி நின்மதிதரும் வளக்குவிவகாரம்பிணக்கு நீங்கும், வனிதயர் வாழ்வுக்கு வளமான ஆண்டாகும்.

மேஷம்- குடும்ப மகிழ்ச்சி, குழந்தைச் செல்வம்.

ரிஷிபம்- செய்தொழில் பங்கம்,விழிப்புடன் இரு.

மிதுனம்- பெற்ரோர் உதவி, பெருமையும் சேரும்,

கடகம்-பொருட்செலவு பொதுத்துறை நாட்டம்.

சிம்மம்- அதிகார அனுகூலம், அகமகிழ்ச்சி.

கன்னி- பிணக்குவரும், பிரிவுக்கு இடமுண்டு.

துலாம்- ஆசை அலைகள், அவப்பெயர்உண்டு.

விருச்சிகம்- சொற்சிறப்பு, சொகுசான வாழ்வு.

தனுசு- சிநேகிதபீடை, சிறுமையும் சேரும்.

மகரம்- அன்னையின் ஆசி, அனைத்திலும் வெற்றி.

கும்பம்- புத்திரசுகம், புதியபாதை.

மீனம்- துன்பத்தின் நிழலாட்டம், துயர் படிந்த நாள்.

—சோதிடக்கலாநிதி

திருமலை வேலுப்பிள்ளை

மானிப்பாய்

வெஸ்லி சினிமா

தினசரி 6-30, 9-30 மணி

பிரிபோயா, போயா 2-30 மணி

சுன்னுகம் பொலிஸ் குதி

# விளையாட்டுபோட்டி முடிவுகள்

உடுவில், வியாழன்

புதுவருடத்தை முன்னிட்டு சுன்னுகம் பொலிஸ் பகுதியினர் நடாத்திவரும் விளையாட்டுப் போட்டிகள் முடிவடையும் கட்டத்தில் உள்ளன. இதுவரை நடைபெற்ற சிலபோட்டி முடிவுகள் விபரம் வருமாறு:

கரபந்தாட்டம்:- கல்லாக் கட்டுவன் காந்தி ரூபன் விளையாட்டுக் கழகமும் உடுவில் மல்வத்தை விளையாட்டு கழகமும் ஆடிய ஆட்டத்தில் முறையே 15-10; 8-15; 15-7 புள்ளிகளைப் பெற்று காந்திரூபன் கழகம் வெற்றியீட்டியது.

சுன்னுகம் கிழக்கு நாவலர் மன்றத்திற்கும் சுன்னுகம் இளந்தென்றல் மன்றத்திற்கும் இடையில் நடைபெற்ற போட்டியில் முறையே 2-15; 15-14; 8-15 புள்ளிகளால் இளந்தென்றல் மன்றம் வெற்றியீட்டியது.

இப்போட்டிகளுக்கு முறையே திரு. என். பதஞ்சலி, திரு. ஏ. முருகையா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

தாச்சிப்போட்டி: உடுவில் மல்வத்தை 'ஏ' பிரிவுக்கும் இணுவில் அண்ணு 'பி' பிரிவு கோஷ்டிக்கும் நடைபெற்ற போட்டியில் 8-0 புள்ளிகளால் மல்வத்தை கோஷ்டி வெற்றிபெற்றது. அளவெட்டி மத்திய விளையாட்டு கழகமும் இணுவில் இந்து விளையாட்டு கழகமும் கலந்துகொண்ட போட்டியில் 6-3 பழங்களால் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது.

இணுவில் அண்ணு கோஷ்டிக்கும் கந்தரோடை ஜெருக்கட் கழகத்திற்கும் நடைபெற இருந்த ஆட்டம், ஜெருக்கட் கழகத்தினர் விளையாட்டிற்கு சமுகமளிக்காமையால் போட்டியின்றியே அண்ணு கோஷ்டிக்கு வெற்றி வழங்கப்பட்டது.

இப்போட்டிகளுக்கு திரு. என். பதஞ்சலி, திரு. ஏ. முருகையா ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

இணுவில் இந்துவும் காந்திரூபனும் கலந்துகொள்ளும் கரபந்தாட்டப் போட்டியுடனும், உடுவில் மல்வத்தையும் இணுவில் அண்ணு கோஷ்டியும் கலந்துகொள்ளும் தாச்சி போட்டியுடனும் இப்போட்டிகள் முடிவடைகின்றன.

# யாழ்.மவட்ட 'பாற்மின்ரன்' போட்டி முடிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாவட்ட ''பாற்மின்டன்'' சங்கத்தின் 5-வது மாகாண பாற்மின்டன் போட்டியும், பொதுப் போட்டியும் நேற்று முன்தினம் கில்னர் கல்லூரி மண்டபத்தில் முடிவடைந்தது.

இவ் இறுதிப்போட்டிக்கு விளையாட்டமைச்சின் உதவி விளையாட்டு அதிகாரி டாக்டர் ஜே. சி. துரைசிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இப் போட்டியின் பரிசழிப்பு வைபவத்தின் போது டாக்டர் துரைசிங்கம் தமது தலைமையுரையில் கூறியதாவது:-

''யாழ்ப்பாணத்தில் பாற்மின்டன் விளையாட்டின் வளர்ச்சி கடந்த ஐந்து வருடங்களில் மிகவும் வேகமாக வளர்ச்சி அடைந்துள்ளது. யாழ்ப்பாணத்திலும் மிகவும் திறமை வாய்ந்த பாற்மின்டன் விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் இருக்கிருர்கள் என்பதை வெளிமாகாணங்களிலுள்ள வீரர்களுக்கு எடுத்துகாட்டக் கூடிய அளவுக்கு, இன்று நடைபெற்ற இவ் இறுதி ஆட்டங்கள் ஓர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளன.

வெளி இடங்களில் உள்ள பாற்மின்டன் கோஷ்டிகள் வந்து விளையாடுவதற்கு ஏற்ற விளையாட்டுத் திடல் இங்கு இல்லாமை மிகவும் பெரும் குறையாக இருக்கிறது. ஒரு சிறந்த விளையாட்டுத்திடலை, விளையாட்டு அமைச்சின் ஆதரவுடன் இங்கு கட்டுவதற்கு என்ருல் ஆன முயற்சிகளை கூடிய சீக்கிரத்தில் எடுப்பேன்.''

இப் போட்டியில் வெற்றி பெற்ருேர் விபரம் வருமாறு:

## பொது ஆட்டம்:

## உடுவில் இசை விழா

இன்றைய நிகழ்ச்சிகள்

குரும்பசிட்டி. வெள்ளி

# புளூ பேர்ட் வென்றது

திருக்கோணமலை, புதன்

புளூபேர்ட் விளையாட்டுக் கழகத்தினருக்கும் பிளேக் அன்ட் வைற் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நிகழ்ந்த உதைபந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் புளூ பேர்ட் வீரர்கள் 3-0 என்ற முடிவுகளால் பிளேக் அன்ட் வைற் வீரர்களைத் தோற்கடித்தனர்.

இடைவேளையின் போது புளூ பேர்ட் வீரர்கள் 2 கோல்களை அடித்து முன்னணியில் நின்றனர். இடைவேளையின் பின்னர், அவர்கள் 3-வது கோலையும்போட்டனர். புளூபேர்ட்டைச் சேர்ந்த விஸ்வநாதன், செல்வராஜா, பாலச்சந்திரன் ஆகிய மூவருமே அந்த 3 கோல்களையும் போட்டனர், இப் போட்டிக்கு பெருேஸ் செயத் மத்தியஸ்தம் வகித்தார்கள்.

# புத்தாண்டு போட்டிகள்

உடுவில, வியா.

புதுவருடக் கொண்டாட்டத்தை முன்னிட்டு சுன்னுகம் பொலிஸ் பகுதியினரால் நடத்தப்படும் மாட்டுவண்டிச்சவாரி போட்டி இம்மாதம் 12-ந் திகதி மாலை 2 மணிக்கு அளவெட்டியில் உள்ள பிணுக்கை வெளியில் நடைபெறவிருக்கிறது.

ஏ, பி ஒற்றைமாட்டு வண்டிச் சவாரி என மூன்று பிரிவுகளாக நடைபெறும் இப் போட்டியில் கலந்துகொள்வோர்கள் பிரவேசப் பண்மாக ரூபா 5இம்மாதம்10-ந் திகதிக்குள் கட்டவேண்டும் என்று வண்டிச் சவாரிப் போட்டி அமைப்பாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி கொண்டாட்டத்தை முன்னிட்டு நடத்தப்படும் மற்றைய விளையாட்டுப் போட்டிகளுள் கயிறிழுத்தல் போட்டி இம்மாதம் 5-ந் திகதி முதல் நடைபெறும். இம்மாதம் 13-ந் திகதி சாலை 50 வயதுக்கு மேற்பட்டோருக்கு 8 மைல் சைக்கிளோட்டப் போட்டி நடைபெறும். இது உடுவில் மருதனுமடம் சந்தியிலிருந்து ஆரம்பமாகி சுன்னுகம் மாகியப்பிட்டி, அளவெட்டி, மல்லாகம் சுன்னுகம் வழியாக மீண்டும் மருதனுமடத்தில் வந்து முடிவடையும்.

# விளையாட்டுக் கழக நிர்வாகிகள்

புத்தூர், வியாழன்

# ட்ருக்டரிலிருந்து பாய்ந்தவர் ஆஸ்பத்திரியில் மரணம்

யாழ்ப்பாணம், வெள்ளி

பொலிஸாரைக் கண்டதும் ஓடிக்கொண்டிருந்த ட்ராக்டரிலிருந்து பாய்ந்து ஓடியதாகக் கூறப்படும் ஒருவர், அந்த அதிர்ச்சியால் யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, அங்கு மரணமானுர்.

இந்தச் சம்பவம் பளைப் பொலிஸ் பகுதியிலுள்ள அல்லிப்பளை என்ற இடத்தில் நடைபெற்றது. இங்குள்ள பொன்னையா கந்தையா (65 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவர் என ஆஸ்பத்திரி பொலிஸார் தெரிவித்தனர்.

ட்ராக்டர் வண்டி ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்த இவர், பொலிஸைக் கண்டதும் ஓடிக்கொண்டிருந்த ட்ராக்டரிலிருந்து பாய்ந்து வீழ்ந்ததாகவும், இதனுல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் ஸ்தலவிசாரணை நடத்திஞர். (கா. நி.)

# செய்திச் சுருக்கம்

## 134 பாடசாலைகளில் பரீட்சை

கோட்டை, வியா.

இம்மாதம் 20-ம் திகதியிலிருந்து மே மாதம் ஆரும் திகதிவரை நடைபெறவிருக்கும் ஜீ. சி. ஈ.உயர்தர பரீட்சைக்கு 134 பாடசாலைகள் பரீட்சை நிலையங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த 134 பாடசாலைகளிலும் விடுமுறையை மே மாதம் ஒன்பதாம் திகதி வரை நீடிப்பதற்கும் ஜீ.சி.ஈ சாதாரண பரீட்சை நடைபெறும்பாடசாலைகளை முன்பு குறிப்பிட்டபடி ஏப்ரல் 18-ம் திகதி திறக்காமல் ஏபரல் 19-ம் திகதி திறப்பதற்கும் கல்வி அமைச்சின் உயர்தர அதிகாரிகள் முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

## முஸ்லிம் லீக் மகாநாடு

கோட்டை, வியா.

இன்று மாவனல்லையில் டாக்டர் கலீல் தலைமையில் அகில இலங்கை முஸ்லிம்லீக்கின் வருடாந்த மகாநாடு நடைபெறுகிறது. இன்று நடைபெறும் இம் மகாநாட்டுக்கான ஆயத்தங்கள்யாவும் திருப்திகரமான வகையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக முஸ்லிம் லீக்கின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## அணுசக்தி பற்றி அறிக்கை

கோட்டை,வியா.

சமீபத்தில் மணிலாவில் நடைபெற்ற தென் கிழக்கு ஆசியா அணு சக்தி அபிவிருத்தி சம்பந்தமான மகாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட டாக்டர் சிறிவர்த்தன அரசாங்கம் இலங்கையில் அணுசக்தி அபிவிருத்தி சம்பந்தமாகக் கடைப்பிடிக்க வேண்டிய வழிவகைகள் பற்றிய அறிக்கை யொன்றை தேசிய வீடமைப்பு விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சிடம் வெகு விரை

# 'மா. பொ. சி வருவது உறுதி'

சுழிபுரம், வியாழன்

தமிழரசுக் கட்சியின் வருடாந்த மகாநாட்டுக்கு தமிழகத்திலிருந்து சிலம்புச் செல்வர் மா. பொ. சிவஞானக்கிராமணியார் வருகைதருவது உறுதியாகிவிட்டதென்றும் பாஸ்போர்ட்,விஸா மற்றும் சகல உத்தரவுப் பத்திரங்களும் எடுக்கப்பட்டுவிட்டதாகவும் கிராமணியார் இம்மாதம் 7, 8, 9 ஆகிய திகதிகளில் உடுவில் மகாநாட்டில் கலந்துகொள்வார் என்றும் தமிழரசுக்கட்சி பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் எம். பி. தெரிவித்தார்.

# தினமும் காட்டுத் தீ

அம்பாறை, வியா.

அம்பாறைப் பகுதியில் திடீர் திடீரென தினமும் காட்டுத் தீ ஏற்படுகிறது. இதை அணைப்பதற்குத் தீயணைக்கும் பகுதினர் பெரிதும் கஷ்டப்படுகின்றனர். கடந்த சில நாட்களாக இப்பகுதியின் வெப்பநிலை 91 முதல் 94 பாகைவரை உயர்ந்துள்ளது. இதனுல் நீர்த்தேக்கங்களில் உள்ள நீரின் நீர்மட்டம் குறைந்துள்ளது. இப்பகுதியின் குழாய்நீர் வசதி கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் ஆகிய நா நிலைகளுக்கு அருகாமையில் அமைக்கப் படுமெனத் தகவல் பகுதி தெரிவித்துள்ளது.


டயரும்ஸ் ஸ்தாபனத்தாரின்
புத்தாண்டு
மலிவு விற்பனையில்
புதிதாக வரவழைக்கப்பட்டுள்ள
★ டிப்ளோமற் பிறின்ஸ் சேட்
★ டிப்ளோமற் றீசன்ஸ் சேட்
★ டிப்ளோமற் ஏயர் டெக்ஸ்
★ டிப்ளோமற் பிறின்ஸ் சேட்
(சிறுவர்களுக்கு)
★ மெக்ஸிம் இளஸிக் ★ மெக்ஸிம் பிறிபெக்ட்
தேவைக்கு முந்துங்கள்.
டயரும்ஸ்
54, மெயின் வீதி :-: யாழ்ப்பாணம்.

3-வது ஜனத்திரள் வாரம்
கெப்பிட்டல் பிளாஸா ஸ்ரீ இருஷ்ணு
(கொழும்பு) (வெள்ளவத்தை) (திருமலை)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
எஸ். வி. ரங்கராவ், பானுமதி
முத்துராமன், பாரதி, ஏ. வி. எம். ராஜன்,
நாகேஷ் நடித்த
வாசு பிலிம்ஸ் அளிக்கும்
பூவும் பொட்டும்
டைரக்ஷன்: தாதாமிராசி

6-வது வாரம்
வெலிங்டன் (யாழ் நகரில்)



சிவாஜி, விஜயா,
முத்துராமன்,
எல். விஜயலக்ஷ்மி,
நாகேஷ். குமாரிசச்சு
இன்னும் பலர் நடித்த
ஸ்ரீதரின்
ஊட்டி வரை உறவு
(ஈஸ்ட்மென் கலர்)

இங்ஸ்லி
(கொழும்பு)
★ சிவாஜி ★ சாவித்திரி ★ தேவிகா
நடித்த
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென்கலர்.)

தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
ராஜேந்திரன்-விஜயகுமாரி
நடித்த
நானும் ஒரு
பெண்

ராஜா 81வது தினம்
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்கள்
அரைக்கட்டணத்துடன்
அனுமதிக்கப்படுவர்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ஜெய்சங்கர் ஜெயலலிதா
நடித்த
யார் நீ

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
முத்துராமன், ராஜ்ஸ்ரீ
நடித்த
அனுபவி ராஜா
அனுபவி

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, & 9-45
Jay Mukerji
Asha Prackh
in
LOVE IN
TOKYO
(HINDI)

MANOHARA
JAFFNA
10-30, 4-45, 7 & 9-45p.m
Jerry Lewis
in
WHO IS MINDING
THE STORE

REGAL at Jaffra
Daily 4-45, 7 & 9-45 p.m
Anthony Quinn
Silvana Mangano
in
BARABBAS
யேசுவின்
சரிதத்தை தழுவியது


## [illegible] நிகழ்ச்சிகள்

குரும்பசிட்டி, வெள்ளி

உடுவில் கிராம சபைத் திறந்த வெளியரங்கில்நடை பெற்றுவரும் அகில இலங்கை இசைத் தமிழ் நிலைய இசைவிழாவின் இரண்டாம் நாள் (வெள்ளிக்கிழமை) நிகழ்ச்சிகளுக்கு திரு. எஸ், செல்வநாயகம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

விழாவின் நிகழ்ச்சிவிபரம் வருமாறு:-

மாலை 6-00 மணி மங்கள இசை. 7-30 பாட்டு செல்வி நவமணி நாகலிங்கம்; 8-00 வயலின் இசை தக்ஷிணகானசபா மாணவிகள்; 8-30 புல்லாங்குழல் இசை: திரு. ஏ. நமசிவாயம்; 9-00 பிரதம விருந்தினர் உரை; 9.15 பாட்டு செல்வன் எஸ் சண்முகராகவன்; 10-00 பாட்டு: திரு. போல் திலகநாயகம்; 10-45 நடனம்: திரு. வெ இராசரத்தினம்மாணவிகள்; 11-00 மெல்லிசை. கண்ணன் கோஷ்டி; 11-30 நாடகம் நாவரசன் கலைக் குழு, 'சைவநீதி'.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 4—4—69

செய்திகள் காலை 7-00, பகல் 12-45. மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன் 61 மீ.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 குரான், 8-15 இஸ்லாமிய கீதங்கள், 8-30 பெரிய வெள்ளி, 9-30 பெரிய வெள்ளிப் பாடல்கள், 10-00 பெரியவெள்ளி — கத்தோலிக்கநிகழ்ச்சிகள், 11-00 பாட்டு, 11-30 பக்திப் பாடல்கள்.

344 மீ. அன் 49 மீ.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் நிகழ்ச்சி.

344 மீ. அன் 61 மீ.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 கானமஞ்சரி.

இரவு 6-15 பஜனை, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 நேயர்கடிதங்கள், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கடிதங்கள், 10-00 கர்நாடக இசை.

## பொது ஆட்டம்:

**ஆண்கள் ஒற்றையர்:-** நாகூர் ஹனே சாம் சந்திரசேனு 9-15, 15-2, 15-5.

**ஆண்கள் இரட்டையர்-** நாகூர் ஹனே, சாம்சந்திரசேனு — டாக்டர் கே. விஜேந்திரா, ஆர். ராஜலிங்கம் 11-15, 15-9.

**ஆண் - பெண் இரட்டையர்:** டாக்டர் கே. விஜேந்திரா, செல்வி எஸ். சபாரட்ணம் — நாகூர் ஹனே, செல்வி அஞ்சலா செல்லத்தம்பு 15-12, 15-13.

## மாகாண ஆட்டம்:

**ஆண்கள் ஒற்றையர்:** டாக்டர் கே விஜேந்திரா கே. கனகராஜா 15-8, 15-10.

**ஆண்கள் இரட்டையர்:** டாக்டர் கே. விஜேந்திரா, ரி. எஸ். சாகராசா கே. கனகராஜா, எம். ஜேயராஜன் 12-15, 15-12, 17-16.

**பெண்கள் ஒற்றையர்:** செல்வி அஞ்சலா செல்லத்தம்பு — செல்வி ரஞ்சினி சபாரட்ணம் 9-12, 11-1.

**18 வயது ஆண்கள் ஒற்றையர்:** எஸ். சுகுமார் — எஸ். திருக்குமார் (சகோதரர்) 15-8, 15-10.

**16 வயது ஆண்கள் ஒற்றையர்:** சி. எஸ். வீரசிங்கம் - எம். மனோகரதாஸ் 15-6, 15-0.

**15 வயது பெண்கள் ஒற்றையர்:** செல்வி எஸ். நடராசா செல்வி பி. சோமசுந்தரம் 11-2, 11-4.

**18 வயது பெண்கள் ஒற்றையர்:** செல்வி எஸ். நடராசா செல்வி எம். யே. அருளானந்தம் 11-6, 11-3.

பாற்மின்டன் போட்டியை இங்கு ஊக்குவிக்கும் நோக்கத்துடன், இவ் விளையாட்டுச் சங்கத்துக்கு, எமது 'ஈழநாடு' ஸ்தாபனமும், ஓர் சலஞ் வெள்ளிக் கிண்ணத்தை வழங்கியுள்ளது.

(தே. நி)

## கங்கை நீர் வற்றுகிறது

கண்டி, வியாழன்

கண்டி மாவட்டத்தில் கடும் வரட்சி நிலவுகிறது. இதனால் கண்டி வாவியின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது. மகாவலி கங்கையிலும் நீர் வற்றிக் காணப்படுகிறது இவ்வரட்சியினால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளதோடு சாதரணமக்களும் தேவைக்கு போதிய நீரின்றி கஷ்டப்படுகிறார்கள்.

## நிர்வாகிகள்

புத்தூர், வியாழன்

அச்சுவேலி செல்வநாயகபுர குடியேற்றத்தில் வன்னியசிங்கம் விளையாட்டு கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகள் வருமாறு:

காரியதரிசி: பு. நாகமுத்து, தலைவர்: க. திரவியம், தனாதிகாரி: வெ. கந்தசாமி, உபகாரியதரிசி: செ. தங்கராசா, உபதலைவர்: கு. யோகராசா. விளையாட்டுப்பகுதித் தலைவர்: மு. சிவநாதன்.

## இந்திய நிபுணர்கள் உதவுவர்

கோட்டை, வியா.

இலங்கையில் வெகு விரைவில் நிறுவப்படவிருக்கும் தேசிய கப்பல் கூட்டுத்தாபனத்திற்கு இந்திய கப்பல் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப வல்லுனர்களின் உதவியைப் பெறுவதற்கு தேசிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் திரு. கே. ஆழ்வாப்பிள்ளை திட்டமொன்றைப் பரிசீலனைசெய்கிறார். இந்திய தொழில் நுட்ப நிபுணர்கள் தேசிய கப்பல் கூட்டுத் தாபனத்திற்காக தெரிவுசெய்யப்படும் இலங்கையர்களுக்குப் பயிற்சி அளிப்பார்களெனக் கருதப்படுகிறது.

0 0

## கிழங்கு செய்கைக்கு கடனுதவி

பதுளை, வியா.

சிறுபோக காலத்தில் உடுளைக்கிழங்கு உற்பத்திக்காக ரூபா 2204800 ஊவாமாகாணத்துக்குக் கடன்உதவி செய்ய விவசாய இலாகா தீர்மானித்துள்ளது. உடுளைக்கிழங்கு பயிரிட பண்டாரவளைப் பகுதிக்கு 818000 ரூபாவும் வெலிமடைக்கு 10 ஆயிரம் ரூபாவும் கடன் கொடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தீக்கிரை

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவு பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த செல்வநாயகம் என்பவரின் நெற்சூடு தீப்பற்றி எரிந்து சாம்பராகியுள்ளது. இத்தீயை அணைப்பதில் முல்லைத்தீவு இராணுவச் சிப்பாய்களும், பொதுமக்களும் எடுத்துக்கொண்ட முயற்சி தோல்வியடைந்தது.

கையொன்றை தேசிய வீடமைப்பு விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சிடம் வெகு விரைவில் சமர்ப்பிக்க உள்ளார்.

## இடையூறுகவுள்ளவர் விலக்கப்படுவர்

கோட்டை, வியா.

அரசாங்கத்தின் உணவு உற்பத்திப் பெருக்கத் திட்டத்தை வெற்றிகரமாக அமுல் நடாத்த இடையூறாகவிருக்கும் இளைஞர்களை நாடு பூராவும் உள்ள வாலிபர் குடியேற்றத் திட்டங்களில் இருந்து விலகுவதற்குக் காணி நீர்ப்பாசன அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுசம்பந்தமான உத்தரவு ஒன்றை பிரஸ்தாப அமைச்சு இருபத்திரண்டு மாவட்டங்களின் அரசாங்க அதிபர்களுக்கு அனுப்பியுள்ளது. வாலிபர் குடியேற்றத் திட்டங்களில் உள்ள வாலிபர்கள் ஒழுங்கற்ற முறையில் நடந்தால் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க அரசாங்க அதிபர்களுககு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டதின் நோக்கத்தைப் பாதிக்கும் முயற்சியில் ஈடுபடும் அரசாங்க ஊழியர்களுக்கெதிராகவும் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என காணியமைச்சு அறிவித்துள்ளது.

## குற்றத் தடுப்பு

கோட்டை, வியா.

குற்றத் தடுப்பு சம்பந்தமான காட்சிப் பொருட்களை பொலிஸ் வாரத்தை முன்னிட்டு கொழும்பு அப்போ

குழாய்நீர் வசதி கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

## பரிசுத்தவாரச் சடங்குகள்

பண்டத்தரிப்பு, புதன்

பரிசுத்தவாரத்தையொட்டி நடைபெறவிருக்கும் புனித சடங்குகள் இளவாலை சென். ஆன்ஸ் தேவாலயம் சென். ஜேம்ஸ் தேவாலயம் பத்தாவத்தை பிலிப் நேரியார் தேவாலயம் ஆகிய இடங்களிலும் சில்லாலை, மாதகல் பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலும் நடைபெறவிருக்கின்றன.

திக்கரிஸ் ஸ்தாபனம் குக் கண்ணாடிப் பெட்டிகளுக் வைக்கப்படவிருக்கிறது இந்தப் பொருட்காட்சியை பொலிஸ் அதிபர் அலரிக் அபயகுணவர்த்தன இம் மாதம் 7-ந் திகதி காலை திறந்து வைப்பார். அப்போதிக்கரிஸ் ஸ்தாபனத்தின் இந்த முயற்சியைபொலிஸ் அதிபர் பாராட்டியுள்ளார்.

## தூதரின் இறுதிக் கிரியை

கோட்டை வியா

ரோமில் விபத்தில் காலமான இலங்கைத் தூதுவர் மேஜர் ஜெனரல் எச். டபிள்யூ. ஜி. விஜேகோனின் சடலம் இம்மாம் 5-ம் திகதி ரோமிலிருந்து கொண்டுவரப்படவிருக்கிறது. ஈமக்கிரியைகள் சகல இராணுவ மரியாதைகளுடனும் 6-ம் திகதி கனத்தை மயானத்தில்நடைபெறவிருர்கிறது.


தமிழில் வெளிவரும் புதிய மருத்துவ வெளியீடு
மகப்பேற்று மருத்துவம்
இலங்கைப் பல்கலைக்கழக மகப்பேற்று மருத்துவ இயல் பேராசிரியராயும், பட்டதாரிப்பரீட்சைச் சோதனையாளராயும், கொழும்பு பெரியாஸ்பத்திரியில் மகப்பேற்றுசிறப்பு மருத்துவராயும் பலவருடங்கள் கடமையாற்றிய
பேராசிரியர் அ சின்னத்தம்பி
L.M S. (Cey), F.R.C.S (Ed), F R.C. .( ng) F.R,C.O.G
அவர்களால் எழுதப்பெற்றது.
பக்கங்கள் 500. விளக்கவரைபடங்கள் 73. விலை ரூ. 15-00
தபாற்செலவு சதம் 75. பதிவுத்தபாலாயின் ரூ. 1.35
இந்நூல் மகப்பேற்று மருத்துவம் கற்கும் மகப்பேற்று நலம்பேணிகளுக்கும், வைத்திய மாணவர்களுக்கும்அவர்களின் தேறுசோதனைகளுக்கு மிகப் பயன்படும். இது தொழில்செய்யும் மகப்பேற்று நலம்பேணு மாதர்களுக்கும், பொதுவைத்தியர்களுக்கும் மற்றும் சிறப்பு வைத்தியர்களுக்கும் உதவக்கூடிய சிறந்த ஒரு கைந்நூல். ஒவ்வொரு தாய்மாரும் கருப்ப நிகழ்ச்சியைப்பற்றி விளக்கம் பெறுவதற்கு ஏற்றவிதமாக, இலகுவாய் வாசித்து விளங்கிக்கொள்ளக்கூடியதாக, எழுதப்பட்டு பளபளப்பான காகிதத்தில் சிறந்தமுறையில் இந்நூல் அச்சிடப் பட்டுள்ளது.
குறிப்பிடப்பட்டதொகைப்பிரதிகளே அச்சாகியுள்ளன.
பதிப்பு: விற்பனையுரிமை
திருமகள் அழுத்தகம், சுன்னாகம். 1503


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்குருமாவை வீழ்த்திய ராணுவத்தளபதி

# கானு ஆட்சித் தலைவர் பதவி துறப்பு

லண்டன், ஏப்ரல் 3

**பணஊழல் சம்பந்தமாக கானுவின் ஆட்சித்தலைவரான ஜெனரல் அங்கரா தம்பதவியை ராஜினமா செய்துவிட்டார். கானுவில் என்குருமா ஆட்சி வீழ்த்தப்பட்ட பின்னர் இவர் ஆட்சிக்குழுவுக்குத் தலைமைவகித்துவந்தார். கானுவின் தற்போது ஆட்சிப் பொறுப்பிலுள்ள தேசிய விடுதலை கவுன்சில் அதன் மிகவும் வயதில் குறைந்த அங்கத்தவரான பிரிகேடியர் அஃப்ரிஃபா என்பவரை புதிய ஆட்சித்தலைவராக நியமித்துள்ளது.**

மூன்று ஆண்டுகளுக்குமுன்னர் அதிபர் என்குருமாவின் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு தேசிய விடுதலைக் கவுன்சில் என்ற ராணுவக்குழு கானுவின் ஆட்சியைக் கைப்பற்றியது. அதன்தலைவராகஜெனரல் அங்கரா பொறுப்பு ஏற்றார். அரசியல் சம்பந்தமான பண வசூல் விஷயத்தில் ஏற்பட்ட முறைகேடுகளையொட்டி அவர் இப்பொழுது பதவி துறந்திருக்கிறார்

வெளிநாடுகளிலிருந்து சுமார் மூவாயிரம் பவுண் வரை தாம் வாங்கியிருப்பதை ஜெனரல் ஒரு விசாரணையின்போது ஒப்புக்கொண்டார். ஆனல் அப்பணம் முழுவதும் சில அரசியல் வாதிகளுக்கு பகிர்ந்து கொடுத்துவிட்டதாக அவர் கூறினர். என்றாலும் இதற்கான முழுபொறுப்பையும் தாம் ஏற்றுக்கொள்வதாகக் கூறி பதவியிலிருந்தும் விலகிக்கொள்ள அவர் சம்மதம் தெரிவித்தார். அதன்பேரில் வயதில் மிகவும் இளைஞரான பிரிகேடியர் அ பிரிஃபாவை விடுதலைக்கவுன்சில் ஆட்சித்தலைவராக நியமித்தது.

இந்த ஏற்பாடு எப்படியிருந்தாலும் கானுவில் இவ்வருடம் செப்டம்பர் 30-ம் திகதி ராணுவத்தாரல்லாதவர்களிடம் ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருப்பது நிச்சயமாக செயல்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

பழனியில்

# மொட்டையடிப்பதில் கோவில் கட்டுப்பாடு

## சென்னை [ ]திமன்ற தீர்ப்பு விபரம்

சென்னை, ஏப். 3

பழனி தண்டாயுதபாணி கோவிலில் நேர்த்திக்கடன் தீர்க்க வரும் பக்தர்கள் மொட்டையடித்துக் கொள்வது சம்பந்தமான பிரச்னை குறித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

பழனி தண்டாயுதபாணி கோவிலில் பிரார்த்தனைக்காக மொட்டை போடுபவர்களிடம் 50 காசு வசூலிக்கப்பட்டு வருகிறது.

இதில் 25 காசு கோவிலுக்கும், 25 காசு சவரத் தொழிலாளருக்கும் சேருகிறது இவ்வாறு மொட்டை போடுவதில் சேரும் முடிகளை இந்திய அரசாங்க வர்த்தக கழகம் விலைக்கு வாங்கி ஏற்றுமதி செய்கிறது. இதற்காக அது கோவில் நிர்வாகத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்து உள்ளது.

பிரார்த்தனைக்காக கோவிலுக்கு வந்து மொட்டை போடுபவர்கள். ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் மொட்டை போடவேண்டும் என்று ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### வெளியில்...

ராமசாமி தேவர் என்ற ஒரு பக்தர் பழனி கோவிலுக்குச் சென்றார். ஆனல் அவர் தேவஸ்தானத்தால் அனுமதிக்கப்படாத வெளியில் மொட்டை போட்டுக் கொண்டார்.

பின்னர் அவர் கோவிலுக்குச் செல்ல மலை அடிவாரத்திற்குச் சென்றார். அங்கு அவரை தடுத்து நிறுத்தி, வெளியில் மொட்டை போட்டதற்காக ரூ 5 கட்டணம் வசூலித்தார்கள்.

இவ்வாறு கட்டணம் வசூலிப்பது தவறு என்று ஆட்சேபித்து, ராமசாமி தேவர் சென்னை ஐகோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்தார். வழக்கை ஐகோர்ட் நீதிபதி

பிரார்த்தனை எவ்வாறு செலுத்துவது என்பது பிரார்த்தனை செலுத்த வருபவர்களைப்பொறுத்த விஷயமாகும்.

வெளி இடங்களில் மொட்டை போட்டுக் கொள்பவர்கள் மலை ஏறிச் சென்று சுவாமி கும்பிடக் கூடாது என்ற விதி முறைகள் எதுவும் தற்போது நடைமுறையில் இல்லை.

இந்த முறையில் அவ்வாறு அதற்காக கட்டணம் வசூலிப்பது தாங்களே ஒரு சட்டத்தை ஏற்படுத்திக்கொள்வது ஆகும்.

இப்படிப்பட்ட தவறான செய்கையாக இருந்தாலும் கூட, இது 'ரிட்' போடக் கூடிய வழக்கு அல்ல. ஏனென்றால் அவர்கள் அரசாங்க அதிகாரிகள் அல்ல.

இந்த நிலையில் சிவில் கோர்ட்டில் வழக்கு போட்டு பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டியது மனுதாரின் பொறுப்பு ஆகும்.

—

### தோட்டத்துரை மர்மமரணம்


## சந்தேக நபர்கள் பிணையில்

கேகாலை, விய ழன்

கேகாலை சென். பீற்றர்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத்துரை 'மர்ம' மரணம்சம்பந்தமாகக்கைது செய்யப்பட்ட அவரது மனைவியையும், காவலாளியையும் கேகாலை மாஜிஸ்திரேட் 6 ஆயிரம் ரூபாய் பிணையில் செல்ல அனுமதித்தார்.

தோட்டத்துரை 5 மாதகாலத்துக்கு முன்னர் கொலை செய்யப்பட்டுத் தோட்டத்திலுள்ள் புகையூட்டப்படும் அறையில் எரிக்கப்பட்டுச் சாம்பராக்கப்பட்டதாகப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

இந்த மரணம் சம்பந்த



சமீபத்தில் யாழ்ப்பாணம் பழைய பஸ்நிலைய மைதானத்தில் நடைபெற்ற கருணநிதி, எம். ஜி. ஆர். பாராட்டுவிழாக் கூட்டத்தில் திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசினர். கூட்டத்தில் கலந்துகொண்ட மக்களில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

# செக்கோஸ்லவாக்கியாவில் மீண்டும் பலத்த கட்டுப் பாடுகள்

பிராக் ஏப் 3

செக்கோஸ்லவாக்கியாவில் செய்தித் தணிக்கைஉட்பட பல புதிய கட்டுப்பாடுகளை அந்த நாட்டு அரசாங்கம் பிறித்திருக்கின்றது.

சோவியத் யூனியனுக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து இந்தக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

சோவியத் பாதுகாப்பு அமைச்சர் மார்வுல் கிரட்சோவுக்கும் செக்கோஸ்லவாக்கிய அமைச்சர்களுக்குமிடையில்நடைபெற்ற நெருக்கடியான ஒரு விவாதத்தின் பின் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது

நாட்டின் பாதுகாப்பு படைகள் அதிகரிக்கப்படுமென்றும் நாட்டின் சமூக விரோத சக்திகளை ஒழித்துக் கட்டுவதற்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

—

## இந்துக்களாக மதமாற்றம் பெறுவதற்கு வரவேற்பு

### சர்வ தேச இந்துக்கள் மாநாடு தீர்மானம்

பாட்ன, ஏப். 3

சர்வதேச ஹிந்துக்கள் இரண்டாவது மகாநாட்டில் மூன்றுதினக் கூட்டம் பல தீர்மானங்களை நிறைவேற்றியபின் முடிவடைந்தது. பசுவதையை அடியோடு தடைசெய்யவேண்டும் என்

கொண்டும், ஆனல் ஹிந்து குடும்ப சட்டங்களுக்கு உட்பட்டு நடக்க விரும்பும் யாவருக்கும் ஹிந்து என்ற பதம் பொருந்தும். அவர்கள் ஜைனர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள், லிங்காயத்துக்கள், பிரம்மோசமா

விமான விபத்து

## 51 பேர் பலி

வண்டன், ஏப் 3

போலவக்கில்கிரோக்கோ

வவனியா செய்திகள்

— நமது நிருபர்

### தமிழ் படும்பாடு

வவனியாவில் உள்ள இ. போ. ச. பஸ் வண்டிகளில் உள்ள பெயர்பலகையில் தமிழ் எடுத்துக்கள் எல்லாம் பிழையாகவும் அடியோடும் அல்லாமலும் இருப்பதால் பிரயாணிகள் தாம் போகும் இடம் அறிவதில் மிகவும் கஷ்டப்படுகின்றனர். அதிகமாக தமிழ் எழுத்துப்பிழையுடன்தான் பஸ்சேவை நடத்தப்பட்டு வருகின்றது. இதைப்பற்றி மேல் இடங்களுக்கு வவனியா பிரயாணிகள் சங்கத்தினர் புகார் செய்திருந்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்.

### காங்கிரஸ் வாலிப முன்னணி

வவனியா தமிழ் காங்கிரஸ் கட்சியின் வாலிபமுன்னணியின் நிர்வாகக் கூட்டம் கட்சிக் காரியாலயத்தில் வாலிப முன்னணித் தலைவர் சபா சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. வவனியர் மாவட்டத்தில் உள்ள எல்லா வாலிபமுன்னணியின் தலைவர்களையிம், காரிய தரிசிகளையும் ஒன்று சேர்ந்து கட்சியின் வளர்ச்சி, கட்சியின் அபிவிருத்திவேலைகள் புதிய கிளைகள், புதிய அங்கத்தவர்கள் சேர்ப்பது போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்

# நெடுந்தீவு செய்திகள்

— நமது நெடுந்தீவு நிருபர் —

### போக்குவரத்துச் சேவை மீண்டும் பாதிப்பு

நெடுந்திவு மக்களின் மிக முக்கியமான பிரயாண சேவை, ஒரு நாளில் மூன்று தடவைகளாக அதிகரித்து மீண்டும் பழையபடி ஒரு சேவையாகக் குறைந்து, வெள்ளிக்கிழமைகளில் ஒரு சேவையும் இல்லாது துண்டிக்கப்பட்டுவிட்டது. சில்வர்ஸ்பிறே என்ற இயந்திரப் படகுதான் இப்போது தனித்து நின்று இச்சேவையைச் செய்துவருகிறது.

நெடுந்திவு பிரயாணச் சேவையில் ஈடுபட்டுவரும் பொதுமராமத்து இலாகாவிற்குச் சொந்தமான மோட்டார் படகுகள் அடிக்கடி பழுதடைவதால் பொதுமராமத்து இலாகாவின் தொழிற்சாலை மேற்பார்வையாளரும் மெக்கானிக்குமான திரு. வால்டர் பெரேரா நெடுந்தீவுச் சேவையில் ஈடுபட்டுப் பழுதடைந்திருக்கும் மோட்டார்ப் படகுகளைக் கூடிய கெதியில் திருத்திச் சேவையில் விடுவதற்கு ஊர்காவற்றுறைக்கு வந்துள்ளதாக அறியப்படுகிறது.

0 0 0

### பல நாட்களுக்குப் பின்...

பல நாட்களாகப் பழுதடைந்து கிடந்த நெடுந்தீவு பஸ்வண்டி மீண்டும் சேவையில் ஈடுபடவிருக்கின்றது. திருத்தமுடியாதநிலையிலிருந்ததாகக் கூறப்படும்

இம்மாதம் 28ந் திகதி ஒரு நீச்சல்போட்டியை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சென்ற வருடம் 3 மைல் நீச்சல்போட்டியில் கலந்துகொண்ட 15 வீரர்களும் 3 மைலையும் நீந்திமுடித்தமை குறிப்பிடத்தக்கதாகும். நெடுந்தீவு வீரர்களுக்கிடையேயான 5 மைல் நீச்சல்போட்டியில் பெருந்தொகையானவர்கள் கலந்துகொள்ளுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது வீரர்களின் பாதுகாப்புக்கு இம்முறையும் கடற்படையினரின் மோட்டார்ப் படகுகளும், நெடுந்தீவு மீனவர்களின் மோட்டார் வள்ளங்களும், கட்டுமரங்களும் உதவுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை விளையாட்டமைச்சின் ஆதரவின் கீழ் நடாத்தப்படும் இப்போட்டிக்கான ஒழுங்குகளை நெடுந்தீவு விளையாட்டுத்துறை அதிகாரி திரு. என் எஸ். முருகேசு செய்துவருகிறார்.

0 0 0

### கோரிக்கை

நெடுந்தீவில் வருடாவருடம் மிருக நோய் பரவி, ஆடு மாடுகள் இறப்பதால் நிரந்தரமான மிருக வைத்திய ஒவசியரை இங்கு நியமிக்குமாறு கோரும் பிரேரணை ஒன்று நெடுந்திவு இணைப்புக்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது. நெடுந்தீவுக் காரியாதிகாரி திரு. த. வேல் நம்பி தலைமையில் நடை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

றியபின் முடிவடைந்தது. பசுவதையை அடியோடு தடைசெய்யவேண்டும் என்றும், மற்ற மதத்தினரை ஹிந்து மதத்துக்கு மாற்றுவதை அங்கீகரித்தும், அந்நிய மிஷனரிகளின் நடவடிக்கைகளை சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் கோரி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பசுவதைத்தடை சம்பந்தமாக தாமதப் போக்கைக் கண்டித்து, தடையை ஒரே சீராக எல்லா ராஜ்யங்களும் அமுல் நடத்த இயலும் பொருட்டு மத்திய அரசு சட்டம் இயற்றவேண்டும் என்று மகாநாடு கோரியது.

பொதுவாக ஹிந்து சட்டத்துக்கும் அதன் பல்வேறு பிரிவுகளுக்கும் உட்பட்டவன் ஹிந்து எனக் கருதப்படவேண்டுமென்று மகாநாடு கூறியது.

இந்தியாவில் இருந்து கொண்டும் பல்வேறு கோட்பாடுகளைப் பின்பற்றிக் கள் ஜைனர்கள், பௌத்தர்கள், சீக்கியர்கள், லிங்காயத்துக்கள், பிரம்மோசமாஜங்கள், ஆரிய சமாஜிகள், அல்லது மலைஜாதியினராக இருக்கலாம், இஸ்லாம் அல்லது கிறுத்துவ மததைதச் சேர்ந்தவர்கள் என்றுசேர்த்துக்சொள்ளப்படாதவர்களாக இருக்கவேண்டும் என்று ஒரு தீர்மானம் கூறியது.

இஸ்லாம் அல்லது கிறுத்துவ மதத்திற்கு மாற்றப்பட்டு தம்முடைய பரம்பரையான பழக்க வழக்கங்களையும் வாழ்க்கைமுறையையும்விடாமல் அப்படியே வைத்துக் கொண்டிருப்பவர்கள் உரியமதமாற்ற நடவடிக்கைகளுக்குப் பிறகு ஹிந்து மதத்துக்கு திரும்பி வரலாம் என்றும் அது கூறியது.

அகில இந்திய ஹிந்து மகாசபைத்தலைவர் திரு. நித்ய நாராயணன்பானர்ஜி தலைமைவகித்தார்.

# கத்தோலிக்க சபையில் தோன்றியுள்ள புரட்சி

## பாப்பாண்டவர் கருத்து

வத்திக்கான் ஏப் 3.

ரோமன் கத்தோலிக்க சபை பெரிய புரட்சியொன்றை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறதென்று பாப்பாண்டவர் புனித அருளப்பர் கூறியிருக்கிறார்.

பல்வேறு நாடுகளின் ஆட்சியாளர்களினால் மட்டுமின்றி சபையிலுள்ள சில குருமார்களாலும், அங்கத்தவர்களாலுமே இந்த புரட்சி ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று பாப்பாண்டவர் கூறினார்.

திருமணம் புரிந்து கொள்வதற்காக சில குருவானவர்கள் குருப்பட்டத்தைத் துறந்திருப்பதையும் குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமான பாப்பாண்டவரின் கட்டளையை சிலர் அங்கத்தவர்கள் மீற முயற்சிப்பதையும் கருத்தில் கொண்டே அவர் இந்த அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார் என்று கூறப்படுகின்றது.

# பிரிட்டிஷ் அதிகாரி இலங்கை விஜயம்

கொழும்பு, வியாழன்

பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சைச் சேர்ந்த ஒரு உயர்தர அதிகாரியான திரு. ஆர். பி. எம். கிங் சென்றவாரம் இலங்கை விஜயம் செய்தார். நிதி உதவி மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமாக அவர் இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்.

ஆசியப் பிரதேச பிரிட்டிஷ் உதவித்திட்டத்திற்கு பொறுப்பதிகாரியான திரு. கிங் பிரிட்டிஷ் நிதி உதவி எத்தகைய பயன் விளைவுகளை ஏற்படுத்தி வருகிறதென்பதை நேரடியாகக் கண்காணிக்கும் பொருட்டே இலங்கைக்கும் மற்றைய ஆசிய நாடுகளுக்கும் விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

இலங்கை பிரிட்டனிடமிருந்து பெறவிருக்கும் 40 லட்சம் பெறுமதியான பொருட்கள் பற்றியும், மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கான உதவி சம்பந்தமாகவும் விரைவில் பிரிட்டனுக்கும் இலங்கை அர

# 51 பேர் பலி

வண்டன், ஏப் 3

போலத்தில்கிரோக்கோ என்ற இடத்துக்கருகில் ஏற்பட்ட ஒரு விமானவிபத்தில் அதிலிருந்த 51 பேரும் பலியாகிவிட்டதாக தகவல் கிடைத்திருக்கின்றது. விமான அதிகாரி உட்பட எல்லாருமே பலியாகியுள்ளனர்.

# ஐஸனோவர் நல்லடக்கம்

வாஷிங்டன், ஏப். 3

முன்னாள் அமெரிக்க அதிபர் ஜெனரல் ஐஸனோவரின் பூதவுடல் நேற்று முழு இராணுவ மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டது.

ஜெனரல் ஐஸனோவரின் சொந்த ஊரான அபலீன் நகரில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் பல வெளிநாட்டுத் தலைவர்கள் கலந்துகொண்டனர். தற்போதைய அதிபர் நிக்ஸனும் முன்னாள் அதிபர் நிக்ஸனும் நல்லடக்கப்பவனியில் கலந்துகொண்டனர்.

## ஆலோசனை நடத்த

# நைஜீரிய தலைவர் சம்மதம்

லண்டன், ஏப்ரல் 3

பயாப்ராவுடன் உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்ளும் வகையில் பயாப்ரா தலைவர் கேணல் ஓஜிக்குவுடன் ஆலோசனைகள் நடத்த நைஜீரியத் தலைவர் ஜெனரல் கோவான் சம்மதித்திருப்பதாக பிரிட்டிஷ பிரதம மந்திரி திரு. ஹரோல்ட்வில்ஸன் நேற்று பிரிட்டிஷ் ஆட்சிமன்றத்தில் கூறினார்.

## தமிழ்நாட்டுக்கு

# 20 ஆயிரம் டன் அரிசி கிடைக்கும்

புதுடில்லி, ஏப் 3

தமிழ்நாடு உணவு தானிய நெருக்கடியைச் சமாளிப்பதற்கு 20 ஆயிரம் டன் அரிசியைக் கொடுத்துதவ மத்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டிருப்பதாக தமிழ்நாடு நிதியமைச்சர் திரு, மதியழகன் புதுடில்லியில் கூறியிருக்கிறார்.

சாங்கத்திற்கும் மத்தியில் பேச்சுவார்த்தைகள் நடைபெற விருக்கின்றதென்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை ஐகோர்ட்டில் ரிட் மனு தாக்கல் செய்தார். வழக்கை ஐகோர்ட் நீதிபதி ஏ. அழகிரிசாமி விசாரித்தார்.

பக்தர் வேறு இடத்தில் முடி எடுத்ததால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு கட்டுவதற்காக ரூ. 5 வசூலிக்கப்பட்டதாக இந்திய அரசாங்க வர்த்தகக் கழகத்தின் சார்பில் கூறப்பட்டது.

இந்த வழக்கில் இன்று நீதிபதி தீர்ப்பு கூறினார். நீதிபதி தீர்ப்பில் கூறியிருப்பதாவது:

பிரார்த்தனைக்கு வரும் பக்தர்களிடம், அவர்கள் எவ்வாறு தங்கள் பிரார்த்தனையை செலுத்தவேண்டும் என்று நிபந்தனை விதிக்கக்கூடாது.

## கனடாவில்

# ஆஸ்திரேலிய பிரதமர்

ஒட்டாவா. ஏப், 3

ஆஸ்திரேலிய பிரதமர் திரு. கோர்டன் தற்பொழுது ஒட்டாவாவுக்கு விஜயம் செய்திருக்கிறார். ஜெனரல் ஐஸனோவரின் இறுதிச்சடங்குகளில் கலந்துகொள்ள அமெரிக்காவுக்குப் போன அவர் கனடா பிரதமருடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக ஒட்டாவாவுக்கு வந்திருக்கிறார்.

பொலிஸ் விசாரணையில் தெரியவந்தது.

இந்த மரணம் சம்பந்தமாகத் தோட்டத்துரையின் மனைவி திருமதி லீலா அபயசேகராவும், காவலாளி டபிள்யூ. ஆர். பெரேராவும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்களை மீண்டும் இம்மாதம் 11-ம் திகதி ஆஜர்செய்யும்படி பொலிசாருக்கு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

# குடும்பம் மீது திருட்டுக் குற்றச்சாட்டு

குரும்பசிட்டி, வியா

வீடு உடைத்து ரூபா 800 பெறுமதியான பித்தளை அலுமீனிய வீட்டுத் தளபாடப் பொருட்களைக் களவாடியதாக அளவெட்டி தெற்கைச் சேர்ந்த எஸ். புவனேஸ்வரி, எஸ். விக்னேஸ்வரி, எஸ். சக்திவேல், எஸ். ஞானசேகரம் ஆகிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வருக்கு எதிராக குற்றம் சுமத்தி சுன்னாகம் பொலிஸார் மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் வழக்குத் தாக்கல் செய்தனர். எதிரிகள் நிரபராதிகள் எனத் தெரிவித்ததையடுத்து தலா ரூபா 500 பிணை செலுத்திச் செல்ல அனுமதித்து வழக்கு விசாரணையை மே மாதம் 5ம் திகதிக்கு நீதிபதி ஒத்திவைத்தார்.

# ரஷ்ய தூதுக் குழுவின் யாழ்ப்பாண விஜயம்

யாழ்ப்பாணம், வெள்ளி

ரஷ்யாவிலிருந்து இலங்கை வந்துள்ள சோவியத் நட்புறவுச் சங்க நல்லெண்ணக் குழுவினர் கடந்த வார இறுதியில் யாழ்ப்பாணம் வந்திருந்தார்கள்.

யாழ்ப்பாண மக்கள் சார்பில் யாழ் நகர முதல்வர் திரு. எஸ். நாகராசா இவர்களை வரவேற்றார். இலங்கையிலுள்ள ரஷ்ய ஸ்தானிகராலய முதலாவது காரியதரிசி தலைமையில் 17 பேர் இக்குழுவில் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

ரஷ்ய மக்களது அன்புக்கு, பேராற்றலுக்கும் யாழ்ப்பாணத்து மக்கள் பெரு மதிப்புச் செலுத்துவதாகவும் சமாதானத்தில் பெரும் பங்கெடுக்கும் ரஷ்ய மக்களது முயற்சிக்கு தமிழ் மக்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்களென்றும் யாழ்ப்பாணத்து மக்கள் [illegible] நல்லெண்ணத் தூதுக்குழுவைத் தான் வரவேற்பதில் மகிழ்ச்சியடைவதாகவும் திரு. நாகராஜா இவர்கள் மத்தியில் பேசுகையில் தெரிவித்தார்.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடையில் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்க்கவே தாம் இங்கு வந்திருப்பதாக தூதுக்குழுவினர் நகரமுதல்வரிடம் தெரிவித்தார்கள். யாழ்ப்பாண மக்கள் சார்பில் தூதுக்குழுவினருக்கு நகர முதல்வர் தேநீர் விருந்து அளித்துக் கௌரவித்தார்.

வெள்ளியினால் செய்யப்பட்ட தேநீர் பாத்திரமொன்றை திரு. நாகராஜா வுக்கு இவர்கள் அன்பளிப்புச் செய்ததோடு லெனின் பதக்கம் ஒன்றையும் அவரது மேலாடையில் இவர்கள் அணிவித்தார்கள்.

(நிருபர்)

போன்ற பல்வேறு விஷயங்கள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. அடுத்த பொதுத் தேர்தல்நெருங்கிக்கொண்டு இருப்பதால் கிராமம் கிராமமாக கட்சியின் கொள்கைகளை பிரசாரம் செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

## பிரயாணிகள் அவஸ்தை

வவனியா ரயில் நிலையத்தில் மலசல கூட மில்லாததால் பிரயாணிகள் பெருத்த கஷ்டத்துக்குள்ளாகின்றனர் இவ்விடத்தில் நவீனமுறையில் அரசினர் பல ஆயிர ரூபாய் செலவுசெய்து கட்டிய மலசல கூடம் தற்பொழுது பாவிக்க முடியாத நிலையில் பழுதுபட்டிருக்கிறது. புதிய மலசலகூடம் கட்டப்பட்டு 2 ஆண்டு பூர்த்தியாகவில்லையாம். ஆனால் அதில் உள்ள பல பகுதிகள் மாயமாக மறைந்துவிட்டன.

## திறந்த கடவை

வவனியா மன்னார் வீதியில் உள்ள திறந்த புகையிரதக்கடவையால் 7 பேர் ஸ்தலத்தில் பலியாகிவிட்டனர். வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் போக்குவரத்து மந்திரிக்கு அவசர தந்தி ஒறை இது சம்பந்தமாக அனுப்பிவைத்துள்ளார்.

# மிருக வைத்தியர் இல்லை

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவில் மிருகவைத்தியர் இல்லாதபடியால் இப்பகுதி மக்கள் கால்நடைகளுக்குச் சிகிச்சை பெறமுடியாத நிலையிலுள்ளனர் இரு தினங்களுக்குமுன் கொக்குத்தொடுவாய் என்னும் கிராமத்தில் மட்டும் ஒருவருடைய பத்து ஆடுகள் நோயால் இறந்துவிட்டனவாம். இவர் முல்லைத்தீவு மிருகவைத்தியரின் உதவியாளர் இருவரையும் தேடிக் கண்டுகொள்ள முடியாமற் போய்விட்டதாக அறியப்படுகிறது, இப்பகுதியில் தாண்டவமாடும் கொடூர வரட்சி காரணமாகக் கால்நடைகள் நோய்வாய்ப் படுகின்றன. 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் இதுவரை மிருகவைத்தியரை நியமிக்காததால் இப்பகுதி மக்கள் பெரும் கஷ்டத்துக்காளாகின்றனர். இதுபற்றி வவனியா எம் பி. திரு. தா. சிவசிதம்பரத்திடம் முறையிட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

சேவையில் ஈடுபட்டிருக்கின்றது. திருத்தமுடியாதநிலையிலிருந்ததாகக் கூறப்படும் இந்த பஸ் வண்டியின் என்ஜின் முழுவதுமே மாற்றி, வேறோர் என்ஜின் இணைக்கப்பட்டுள்ளமையால் தொடர்ந்து சிறந்த சேவையைச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது. பஸ் சேவை பாதிக்கப்பட்டிருந்த காலத்தில் பிரயாணிகள் பெரும் கஷ்டத்தை அதுவும் பங்குனி வெய்யிலின் கடுமையான வெப்பத்தையும் அனுபவிக்கவேண்டியிருந்தது.

0 0 0

## 5 மைல் நீச்சல் போட்டி

சென்ற வருடம்போல் இம்முறையும் நெடுந்தீவில்

யாதிகாரி திரு. த. வேல்நம்பி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் நெடுந்தீவுக்கு மாதத்தில் இருதடவையாகுதல் பல் நிபுணர் ஒருவரை, இங்கு விஜயஞ்செய்து சிகிச்சை அளிக்குமாறு கோரும் பிரேரணையும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

0 0 0

## கண் நிபுணர் இலவச வைத்தியம்

சென்ற மாதம் 30ந் திகதி நெடுந்தீவுக்கு விஜயஞ் செய்த கண் நிபுணர் டாக்டர் பரராசசேகரம் பெருந்தொகையான கண் நோயாளருக்கு இலவச சிகிச்சை அளித்தார்.

# கொக்கிளாய்பாலம் விரைவில் பூர்த்தியாகும்

முல்லைத்தீவு, வியாழன்

முல்லைத்தீவிலிருந்து கொக்கிளாய்க்குச் செல்லும் பாதையில் 11-வது மைலில் உள்ள நாயாற்றை தாம்போதி மூலம் மக்கள், பஸ் வண்டிகள், கடந்துசெல்லும் நிலை இருந்துவருகின்றது. இடை இடையே 'தாம்போதி' தண்ணீரில் மூழ்குவதால் வாரக்கணக்கில் பிரயாணிகளின் போக்குவரத்துத் தடைப்பட்டுள்ளது. எனவே மேற்படி ஆற்றைக் கடக்கப் பாலம் ஒன்றை அமைக்க வவனியா எம். பி. திரு தா. சிவசிதம்பரம் நடவடிக்கை எடுத்து பால வேலைகள் முடிவடையும் கட்டத்தில் வேலைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

தற்போது நிலையை விளக்கிச் சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பேட்டிகண்டு உடனடியாகப் பாலம் கட்டி முடிக்கவேண்டுமென்று வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் கேட்டுக்கொண்டதைத் தொடர்ந்து விரைவில் வேலைகள் ஆரம்பமாகி மூன்றுமாத காலத்தில் மக்கள் பாலம் பாவனைக்கு விடப்படுமென்று அறியப்படுகிறது.

# புதிய சமாதான நீதிபதி

அல்லைப்பிட்டி, வியாழன்

வேலணைக்கிராமசபையின் புதிய தலைவர் மூ. குலசேகரம்பிள்ளை சமாதான நீதிபதியாக யாழ். மாவட்ட நீதிபதி முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

# புதிய பிரிட்டிஷ் ஹைகமிஷனர் வந்து சேர்ந்தார்

கொழும்பு, வியா.

இலங்கையின் புதிய பிரிட்டிஷ் ஹைகமிஷனரான திரு. ஏ. எம். மக்கின்ரொஷ் தமது புதிய நியமனத்தைப் பொறுப்பேற்கும் பொருட்டு இலங்கை வந்து சேர்ந்துள்ளார்.

முன்னாள் தூதர் சேர் ஸ்டான்லி தொம்சனின் வாரிஸான இவர் லண்டனிலுள்ள வெளிவிவகார சாம்ராஜ்ய காரியாலயத்தில் ராஜாங்க உதவி கீழ் காரியதரிசியாகப் பணியாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இங்கிருந்து மாற்றலாகிச் சென்ற சேர் ஸ்டான்லி தொம்லின்சன் இப்போது சாம்ராஜ்ய வெளிவிவகார காரியாலயத்தில் ராஜாங்க உதவி கீழ் காரியதரிசியாகக் கடமையாற்றி வருகிறார்.

# பாராட்டு

அல்லைப்பிட்டி, வியாழன்

நாரந்தனைக் கிராம சபைக்கு இரண்டாம், மூன்றாம் வட்டாரங்களுக்கு போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்ட குமாரவேலு பத்மநாதன், சின்னையா குருசாமி ஆகியோருக்கு மேற்படி வட்டார வாலிபர்கள் புளியங்கூடல் சந்தியில் வைத்து மாலையணிவித்து வரவேற்புபசாரம் அளித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனிதன் பூரணத்தை அடைய ஆசைப்படுகிறான். முயற்சியும் செய்கிறான், இதனின்றே இந்து சம்பிரதாயத்தில் பகவான் அடிக்கடி அவதாரம் எடுக்கிறான் என்கிற கொள்கை பிறந்திருக்கிறது.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், கீலக வருஷம் மாசிமாதம் 22-ந்திகதி
(4-4-69)


## வாக்குறுதி

தமிழரசுக் கட்சியின் தூதுக் குழுவொன்று பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவை இன்று சந்தித்துப் பேசவிருப்பதாகவும் தேசிய அரசாங்கம் அமைத்தபொழுது தமிழரசுக்கட்சிக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பற்றி இறுதியாக ஒரு வார்த்தை கேட்பதே இச் சந்திப்பின் நோக்கமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

1965-ம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிந்ததும் அரசாங்கம் அமைப்பதற்கு தமிழரசுக் கட்சியின் உதவியையும் ஒத்துழைப்பையும் திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையிலுள்ள ஐக்கிய தேசியக்கட்சியும் திருமதி சிறிமாவோ பண்டாரநாயகாவின் தலைமையிலமைந்த கூட்டணியும் நாடின. யார் அரசாங்கம் அமைப்பதானாலும் தமிழரசுக் கட்சியினர் தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கம் அமைப்பதற்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பதற்கு நிபந்தனை விதித்திருப்பார்களெனபது, யார் மறுத்தாலும் மறுக்காவிட்டாலும் உண்மை என்பது கடந்த காலச்சம்பவங்களிலிருந்து தெளிவு. ''தமிழரசுக்கட்சியினரின் கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற கூட்டணியினர் தயாராக இருந்தனர்'' என்ற தமிழரசுக் கட்சியினரின் கூற்றைக் கூட்டணியினர் இப்போது மறுக்கின்றனர். இதே போல், ''தமிழரசுக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஒப்பந்தம் எதுவும் இல்லை'' என்று ஐக்கிய தேசியக்கட்சியினரும் மறுக்கின்றனர். என்றாலும் திரு. டட்லி சேனநாயகாவுக்கும் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்குமிடையில் ஓர் உடன்பாடு ஏற்படபதென்பதைப்பிரதமர் மறுக்கவில்லை. ஆனல் அது கட்சித்தலைவர்கள் என்ற முறையில் ஏற்பட்டதாக இருந்ததென்பது தெளிவு. பின்னர் 1960ம் ஆண்டு ஜூலை தேர்தலில் திருமதி சிறிமா தலைமையிலான சுதந்திரக்கட்சி மிகப் பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சிக்கு வந்தபோது தமிழரசுக்கட்சியினர் அதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளித்தனர். திரு. டட்லியின் அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு சுதந்திரக்கட்சியினருடன் தமிழரசுக்கட்சியினர் ஒத்துழைத்ததற்கு அந்தக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் தங்கள் கோரிக்கைகள் நிறைவேறுமென்ற நம்பிக்கையும் அதற்கு அவர்கள் முன்பு கொடுத்திருந்த வாக்குறுதியுமே காரணமாகும். காலஞ்சென்ற திரு பண்டாரநாயகா தமிழரசுக்கட்சியினருடன் செய்து கொண்ட ஒப்பந்தம் சிதைவதற்கும், திருமதி சிறிமா பண்டாரநாயகா கொடுத்த வாக்குறுதி நிறைவேருமல் போவதற்கும் எந்த அரசியல்ஆதிக்கப்போட்டியும் பிரசாரமும் காரணமாக இருந்ததோ அதேதான் இன்று திரு. டட்லி சேனநாயகாவும் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமலிருப்பதற்கும் காரணமென்பதை தமிழரசுக்கட்சித் தலைவர்கள் உட்பட யாவரும் நன்கறிவர்

ஆனாலும் தமிழரசுக்கட்சியின் மகாநாடு இம்மாதம் 7-ம் திகதி கூடுவதாலும் தங்கள் அங்கத்தவர்களுக்கும் எந்தக் கட்சியில் உள்ளது போல் தங்கள் கட்சியிலுமுள்ள தீவிரவாதிகளுக்கும் தக்க பதில் சொல்வதற்கு, பிரதமரைச் சந்தித்து ஏதாவது ஒன்றைச் சொல்லத்தான் வேண்டும். இந்தச் சமயத்தில் எதைச் சொன்னாலும் அதாவது அரசாங்கத்துக்குச் சாதகமாக ஏதாவது சொன்னல் அடுத்த தேர்தலைப்பற்றிய கவலை ஏற்பட வேண்டும். இதே நிலைதான் பிரதமருக்கும். தமிழரசுக்

---

பௌத்த விகாரை தோன்றுவதற்கு முன்பே

# இந்துக்கோயில் இருந்ததற்கு

# மகாவம்சத்தில் சான்று உண்டு

**திருகோணமலையில் இந்து கோயில்கள் அழிக்கப்பட்டு பௌத்த கோயில்கள் எழுப்பப்பட்டதற்கு மகாவம்சத்திலேயே சான்று இருப்பதாக இக்கட்டுரை ஆசிரியர் கூறுகிறார். கோணேசர் ஆலயம் அங்கு கோகன்ன விகாரை தோன்றுவதற்கு முன்பே எழுப்பப்பட்டது என்று அவர் சான்றுகளுடன் விளக்குகிறார்.**

**மு. தர்மலிங்கம் - பி. ஏ. (இலங்கை)**

சமயத் துறையிலே சரித்திரப் பிரசித்திபெற்ற கோணேசர் கோயில் இன்று அரசியற்றுறையிலும் முன்னெப்போதும் பெருத முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. கோணேசர் கோவிற் பகுதியை இந்துக்களின் புனித நகராக்குவதற்கு எடுத்த நடவடிக்கைகளே இன்றைய அரசியல் முக்கியத்துவத்துக்குக் காரணம் என்பது வெளிப்படை.

இக்கோயில் எப்போது கட்டப்பட்டது? இங்கு ஒரு காலத்தில் பௌத்தவிகாரை இருந்ததா? என்பனபோன்ற கேள்விகள் இன்றைய சூழ்நிலையில் ஆராயப்படவேண்டியனவாகும். இவ்விஷயங்களைத் தெளிவாகவும் திடமாகவும் விளங்கிக்கொள்வதற்கு நம்பிக்கையான வரலாற்றுதாரங்களைப் பயன்படுத்தவேண்டும். கல்வெட்டுக்கள், அகழ்ந்தெடுக்கப்பட்ட புதைபொருட்கள், இலக்கியங்கள், மானிடவியல் சான்றுகள் ஆகியவற்றைவரலாற்றுசிரியர்கள் பயன்படுத்துவர். இவற்றில் கல்வெட்டுகளே வரலாற்றுராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவன கோணேசர் கோயிலைப் பொறுத்தவரை 'முன்னே குளக்கோட்டன் மூட்டும் திருப்பணியை' என்றுதொடங்கும் கல்வெட்டுச்செய்தியால், குளக்கோட்டன் என்பவனால் கோயில் கட்டப்பட்டது என்பதை அறியமுடிந்தாலும் கோயில் எப்போது கட்டப்பட்டது என்பதை அறியஇயலவில்லை ஆனல் இன்னொரு கல்வெட்டின்படி 'மனுராசன் என்ற இலங்கை அரசனால் கி. மு. 1300-ல் வீதியா மண்டா என்றதெய்வத்திற்கு இந்தக் கோவில் கட்டுவிக்கப்பட்டது' என்பர் எனவே கோணேசர் ஆலயத்தைக் கட்டியது குளக்கோட்டனா? மனுராசனா? என்ற கேள்வி எழுவது இயற்கை இவர்கள் இருவருமே ஆலயம் அமைத்திருக்கிருர்கள் என்பதைவரலாற்றை நுணுகி ஆராய்வதன் மூலம் ஊகிக்கமுடியும்.

இலங்கைக்கு அண்மையில் உள்ள தமிழ் நாட்டின் வர

இடிக்கப்பட்ட கோணேசர் கோவில் பல்லவக் கட்டிடக் கலை முறையைப் பின்பற்றி அமைக்கப்பட்டதாகும். பல்லவர் காலத்தில வாழ்ந்த சம்பந்தர், கோணேசர் கோயிலைச் சிறப்பித்துப் பாடியிருப்பதும் குறிப்பிடத்தக்கது இதனால பல்லவர் காலத்திலிருந்தே கோணேசர் கோயில் சிறப்புடன் விளங்கியது என்பதையும் அதற்குப்பின்புள்ள காலங்களில் அங்கு பௌத்த விகாரை அமைக்கப்படவில்லை என்பதையும் அறிய முடியும். பல்லவர் காலத்துக்கு முன்புள்ள நீண்ட காலப் பகுதியிலும் இந்தக் கோவிலே இவ்விடத்திலிருந்தது. ஒரு குறுகிய காலப் பகுதியில மட்டும் கோகன்ன விகாரை இருந்தது என்பதை ஏற்கலாம். அக்காலப் பகுதி கி. பி. 334 க்கும் 362 க்கும் இடையிலிடம் பெறும் மகாசேனனுடைய ஆட்சிக் காலம் தொட்டு கி பி 6-ம் நூற்றாண்டின் பிற்பகுதியளவில ஆரம்பமான பல்லவராட்சிக காலம்வரையுள்ள பகுதியாகும். எனவே ஏறக் குறைய இரண்டு நூற்றாண்டுகள்வரையில் கோகன்ன விகாரை இருந்திருக்கலாம் அதுவும் தமிழர்கள் பௌத்தத்தைத் தாமாக விரும்பி ஏற்றுக் கொண்டதன் விளைவே.

இலங்கையின் ஆதிகால வரலாற்று நூலான மகாவம்சமும்கோகன்ன விகாரை பற்றிக் குறிப்பிடுகிறது ''மகாசேனன் பிராமணக் கடவுளரின் கோயில்களை அழித்துவிட்டு மூன்று விகாரைகளைக் கட்டினன். அவைகளில ஒன்று கோகன்ன விகாரை என மகாவம்சம் கூறும். மகாவம்சத்தின் உரை நூலான ''மகாவம்சரீகா''வில ''கோகன்ன விகாரை கிழக்குக்கடற்கரையோரமாக அமைந்திருந்தது'' எனக்கூறப்பட்டுள்ளது என விலகெலம் கெய்கர் கூறுவர்.

பிராமணக் கோவிலை அழித்தே மகாசேனன்கோகன்ன விகாரையைக் கட்டினன் என்று கூறப்பட்டிருப்பதால் மகாசேனனுடைய காலத்துக்கு முன்னரே அங்கு இந்துக்கோவில இருந்தது என்பது தெளிவாகிறது. இதிலிருந்து அந்தக் கோயில கி. மு. 1300-ல மனுராசனால கட்டப்பட்டதென்று ஊகிக்கலாம்,

பண்டுதொட்டு இந்துக்களின் செல்வாக்கின் கீழ் இருந்த கோணேசர்கோவில் பகுதியை இந்துக்களின் புனிதநகரமாகப் பிரகடனம் செய்யும்படி கேட்பது ஒரு நியாயமான கோரிக்கையே. ஒரு குறுகிய காலப் பகுதியில் அங்கு பௌத்தம் நிலவியது என்பதற்காகப் பௌத்தர்கள் முட்டுக்கட்டை போடுவது நியாயமாகாது. தமிழர்கள் தாமாகவே பௌத்தத்தை மேற்கொண்டு தாமாவே அதற்கு விடை கொடுத்தவர்கள் என்பதையும் தற்போதைய பௌத்தர்கள் சிந்திக்க வேண்டும். தமிழர்கள் ஒரு காலத்தில் பௌத்த மதத்தை மேற்கொண்டிருந்ததற்கு அண்மையில் கந்தரோடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட பௌத்த சின்னங்களும் சான்றாகும்.

---

# ''சிறப்புப் பதவிகளின்

# எண்ணிக்கை உயரவேண்டும்''

கோட்டை, வியாழன் ''எழுதுவினைஞர் சேவையைப் போன்ற ஏனைய சமமான சேவைகளைப் போல் அஞ்சலதிபர்கள் சேவையில் உள்ள சிறப்புப் பதவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப் பட்டதனல், முதல்தர அஞ் முறையைப் பின்பற்றினர்கள். ஆனல் 1946ஆம் ஆண்டு ஆணைக்குழு தந்தித் தொடர்புப் பரிசோதகரின் அடிப்படைச் சம்பளத்தை இரண்டாம் வகுப்பு எழுதுவினைஞரின் மிகக் குறைந்த அடிப்படைச் சம்பளத்தைவிட அஞ்சலதிபர்களின் சேவை வெகுவாக வேறுபட்டதும், கடுமையான நிபந்தனைகளுக்குட்பட்டதும் என்பதை ஏற்றுக்கொள்வதாலும், அது உடல் நலத்தை யும், உள நலத்தையும் பாதிப்பதால் அவர்களின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

---

## நட்டிலும் நகரிலும்

மலேரியா நோய் இப்பொழுது இலங்கையின் பல பாகங்களில் தலைதூக்கியிருக்கிறதல்லவா? பல வருடங்களுக்கு முன்பு இது கொள்ளை நோயாக பரவி ஆயிரக்கணக்கான உயிர்களை குடித்து வந்த சமயத்திலும் யாழ்ப்பாண குடாநாட்டை எட்டிப்பார்க்க தயங்கிக் கொண்டிருந்தது. இப்பொழுது யாழ்ப்பாணத்துக்கும் அதனால் ஆபத்து வந்துவிட்டது.

வன்னிப் பகுதிகளில் காடழித்து கமம் செய்கிறவர்கள் அடிக்கடி மலேரியா காய்ச்சலால் பீடிக்கப்பட்டு ஊருக்கு திரும்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

ஆரம்பத்தில் மலைநாடுகளில் ரப்பரையும் தேயிலையையும் உண்டுபண்ணிய வெள்ளைக்காரருக்கு மலேரியா தொற்றிக் கொண்டபோது குவினைன் குளிசைகளை விழுங்கி நோயை குணப்படுத்தினர்கள். அதற்கும் கேட்காமல் மலேரிய பரவத் தொடங்க அந்நோயின் கிருமிகளைக் காவித்திரியும் நுளம்புகளே அதற்கு மூலகாரணம் என்று கண்டுபிடித்து நுளம்புகளை கொல்வதற்கு டி. டி. ரி. மருந்தை கையாண்டார்கள் 193–ம் ஆண்டளவில் மலேரியா தடுப்பு இயக்கம் என்று ஒரு தனி அரசாங்கப் பகுதியே இந்த கைங்கரியத்தை மேற்கொண்டு காடுமேடு, குளம் குட்டை, மூலை முடுக்கு எங்கும் டி. டி. ரி. என்ற மாயமருந்தை தெளித்து அடித்ததன் விளைவாக மலேரியாவின் உக்கிரம் வெகுவாகத் தணிந்துவிட்டது. இனிமேல் அது இலங்கையில் தலைகாட்டாது என்றே எல்லோரும் நம்பியிருந்தார்கள்

காலம் செல்லச்செல்ல மலேரியா நுளம்புகளுக்கு டி. டி. ரி. நன்றாக பழக்கமாகிவிட்டது. முதலில் மயங்கி விழுந்த நுளம்புகள் பின்னர் அதை எதிர்த்து எழும்பி உட்கார்ந்தன. கடைசியில் டி. டி. ரி. இல்லாமல் நுளம்புகள் வாழமுடியாது என்ற கட்டமே வந்துவிட்டது போல தெரிகிறது! டி. டி. ரி. யின் மகிமை குறைந்தது.

இனிமேல் நுளம்புகளை கொல்வதற்கு புதிதாக ஏதாவதொரு மருந்தை கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது.

(8-ம்கலத் தொடர்ச்சி)

டி. டி. ரி. யைப் போலவே குவினைன் மாத்திரைகளின் வல்லமையும் குறைந்துவிட்டது. குவினைன் ஊசிகள் ஏற்றியும் பலருக்குமலேரியா மாற்றமுடியாத நோயாக பற்றிக்கொள்ளுகிறது. அந்த நேரத்துக்கு ஜுரம் தணிவதும் பின்னர் மறுதலிப்பதுமாக அது கோளாறு செய்கிறது.

மலேரியாவை மூன்றே மூன்று நாட்களில் அகற்றக்கூடிய ஒரு மூலிகை நம் நாடுகளில் இருப்பதாக ஓர் இந்திய தாவரவியல்நிபுணர் கண்டு பிடித்திருக்கிறார். இவர்கூறிய கிபார்சின் பேரில் பலகாலமாக மலேரியாவினால் வருந்திய ஒருவர் இம் மூலிகையை உபயோகித்ததாகவும் மூன்று நாட்களில் நாய் அடியோடு மறைந்துவிட்டதென்றும் வியந்து பாராட்டிபத்திரிகையில் எழுதியுள்ளார்.

இந்த அதிசய மூலியின் பெயர் 'சிறு தகரை' என்பதாகும். எனக்கு மூலிகைகளைப்பற்றி அதிகம் தெரியாது, ஆனல் இது தென்னிந்தியாவில் கிடைக்கூடியதானல் இலங்கையிலும் கிடைக்கும் என்றே நம்புகிறேன். அப்படியானல் நமது நாட்டு வைத்தியர்களுக்கு இது நன்ருக தெரியும். கொழும்பிலுள்ள சுதேச வைத்திய கல்லூரியும் இம்மூலிகையை பரீட்சித்து பார்கலாம்.

இதை உட்கொள்ளும் முறை பின்வருமாறு: சிறுதகரை இலைகளைக் கொய்து சாருக்கி அதே அளவு மோரில் கலந்து காலையில் மூன்றுநாட்களுக்கு குடிக்க வேண்டும். மூன்று நாட்களில் காய்ச்சல் நிற்காவிட்டால்மேலும் சில நாட்களுக்கு உட்கொள்ளலாம். ஆனல் மூன்று நாட்கள் குடித்தால் போதுமானதென்றே கருதப்படுகிறது

சிறுதகரை வேறு பல நோய்களையும் குணமாக்க வல்ல ஓர் அருமையான மூலிகையாம்.

—வழிப்போக்கன்

நைப்பிரதமர் மறுக்கவில்லை. ஆனால் அது கட்சித்தலைவர்கள் என்ற முறையில் ஏற்பட்ட உடன்பாடே தவிர பிரதமர் என்ற முறையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை அல்லவென்று அவர் கூறியிருக்கிறார். எனவே திரு. செல்வநாயகம் தனிப்பட்டமுறையிலோ தமிழரசுக் கட்சியின் தலைவர் என்ற முறையிலோ தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு சில நிபந்தனைகள் விதித்து அவற்றுக்கு ஒப்புக்கொண்டபின்னர் ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்க தமிழரசுக் கட்சிமுன் வந்ததென்பதில் ஐயமில்லை.

தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து நான்கு ஆண்டுகளாகி விட்டன. தமிழரசுக் கட்சிக்குக் கொடுத்த வாக்குறுதிகள் அத்தனையும் நிறைவேற்றப்படவில்லையென்பது உண்மைதான். இதற்காக பிரதமர் திரு, டட்லி சேனநாயகாவை மட்டும் குறைசொல்வதற்கில்லை. ''வாக்குறுதிகள்கொடுக்கமாட்டோம், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறமாட்டோம்''என்று ஆட்சி மன்றத்திலேயே பிரதமர் திரு. டட்லி கூறியிருந்தார். அவரைப் பொறுத்தவரையில் சட்ட ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு தம்மாலியன்றளவு முழு முயற்சி செய்தாரென்பதைதமிழரசுக் கட்சியினர் மட்டுமல்ல மற்றையோரும் நிச்சயம் ஒப்புக்கொள்வர் 1960-ம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற தேர்தலின் பின் திரு. டட்லி தலைமையில் குறைந்தபெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு தமிழரசுக் கட்சியினரே காரணமாக இருந்தனர். இதற்கு அச்சமயம் திருமதி சிறிமா பண்டாரநாயகா தலைமையிலமைந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் கொடுத்த வாக்குறுதிதான் மூலாதார

தலைப்பற்றிய கவலை ஏற்பட வேண்டும். இதே நிலைதான் பிரதமருக்கும். தமிழரசுக் கட்சியினரின்கோரிக்கைக்குச் சாதகமாக அவர் ஏதாவது சொன்னால் அடுத்த தேர்தல் பற்றி அவரும் அவரது கட்சியினரும் கவலைப்பட வேண்டி நேரிடும் என்றாலும் எந்த வாக்குறுதிகளின்மீது ஆட்சிபீடத்திற்கு வர முடிந்ததோ அந்தவாக்குறுதிகளைமீறுவது நியாயமுமல்ல; மனிதத்தன்மையுமல்ல.

இதேசமயம் தமிழரசுக் கட்சியினர் ட்டுமல்ல, சிறுபான்மையினரும் அவர்களின் பிரதிநிதிகளும் ஒன்றை நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம். அதாவது தனிப்பட்ட ஒருவருடனோ, ஓர் அரசியல் கட்சியுடனோ ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை செய்து கொள்வதால் உரிய பயன் கிடைக்காது என்பதுதான். இது கடந்தகால அனுபவத்தினால் கிடைத்த படிப்பினை. ங்

## பஸ் விபத்தில் சிக்கியவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், வெள்ளி.

இ. போ. ச. பஸ்ஸினால் மோதுண்ட 45 வயதுடைய ஒருவர் மிகவும் அபாயகரமான நிலையில்யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எச். எம். பொடிமாத்தயா என்பவரே இவ்வாறு விபத்துக்குள்ளானவராவார். இவ்விபத்து ஊர்காவற்றுறையில் நடைபெற்றதாகப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கா. நி.)


### விற்பனைக்கு

புடவைக்கடைக்குரிய தளபாடங்கள் நல்ல நிலையில் சொற்ப புடவையுடன் விற்பனைக்கு உண்டு. நேரில் பார்வையிடலாம். சிவசக்தி ரெக்ஸ்ரைல்ஸ், மெயின் வீதி, சுன்னாகம். 805



## வண்ண விநாயகர்

அழகான விநாயகரின் வண்ணப் படத்துடன் தமிழ்ப் புதுவருட பஞ்சாங்கம் 12-4-69 'ஈழநாடு' பத்திரிகையுடன் இலவசமாகக் கிடைக்கும். உங்கள் பிரதிகளுக்கு இன்றே உங்கள் பகுதி விற்பனையாளரிடம் ஒழுங்கு செய்து கொள்ளுங்கள்.


[illegible]

இலங்கைக்கு அண்மையில் உள்ள தமிழ் நாட்டின் வரலாற்றுப் போக்கு பல தடவைகளில் இலங்கையின் வரலாற்றையும் நிர்ணயித்திருப்பதைக் காணமுடியும். பண்டைய இந்தியாவில் இந்துமதம் மோலோங்கியிருந்தது இடையில் பௌத்த சமண சமயங்களின் எழுச்சியால் இந்துசமயம் செல்வாக்கிழந்தது. இந்துக்கள் பலர் பௌத்தர்களாயினர். இந்துக் கோவில்கள் பல பௌத்த கோவில்களாயின. மீண்டும் பல்லவர் காலத்தில் சம்பந்தர், அப்பர் போன்ற சமய குரவர்களின் பக்தி இயக்கத்தின் காரணமாக இந்து மதம் புத்துணர்ச்சியால் புகழ்பூத்து மேலோங்கியது. பக்திவெள்ளம் தமிழ்நாட்டில கரைபுரண்டோடியது இதற்கு ஈடுகொடுக்க இயலாத பௌத்தமும் சமணமும் மறைந்தன. இடையிலே பௌத்த சமண சமயங்களை மேற்கொண்ட தமிழர்கள் பழம்பெருமை வாய்ந்த இந்துமதத்துக்குத்திரும்பவும் அடிமைகளாகினர். பௌத்த சமணக் கோவில்களும் மடங்களும் மீண்டும் இந்து சமயத்தின் உறைவிடங்களாக மாறின.

தமிழ்நாட்டில் இடம்பெற்ற இப்படியான ஒரு வரலாற்றுப் போக்கு அருகில இருந்த இலங்கையிலும் தனது பாதிப்பை தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பது ஏற்கக்கூடியதே. ஆகவே மனுராசன் கி. மு. 1300 அளவில கட்டிய இந்துக் கோவில, காலப் போக்கில பௌத்த சமய எழுச்சியின் காரணமாகத் தமிழர்கள் பௌத்தர்களாக மாறியதால அழிக்கப்பட்டிருக்கலாம். பௌத்தத்தை மேற்கொண்ட தமிழர்களின் விருப்பத்தினால அந்தஇடத்தில கோகன்னவிகாரை கட்டப்பட்டிருக்கலாம். தமிழ்நாட்டில் பல்லவர்காலத்தில் பக்தி இயக்கம் தோன்றவே அதன் பாதிப்பினால் ஈழநாட்டிலும் பக்திவெள்ளம் பெருகிப் பாய்ந்தபோது கோகன்ன விகாரையும் வெள்ளத்துடன் அள்ளுண்டு போயிற்று. பின்னர் குளக்கோட்டன் கோணேசர் ஆலயத்தைக் கட்டினான். கோணேசர் கோவிற்பகுதியில் ஆங்காங்கே காணப்படும் அழிபாடுகளை நோக்கினால் அவைகளில் பல்லவக் கட்டிடக் கலைப்பாணியின் சாயல்கள் இருப்பது புலனாகும். எனவே கொன்ஸ்ரன் ரைன் டீசாவினால்

உள்ள சிறப்புப் பதவிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டதனால், முதல்தர அஞ்சலதிபர்களின் 25 வீத கூடுலானோர் இத்தரத்துக்குரிய மிகக்கூடிய அடிப்படைச் சம்பளத்தில் தேங்கியுள்ளார்கள் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.''

அஞ்சல் தொலை தொடர்புச் சேவையாளர் சங்கத்தின் வருடாந்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

முதல்தர பதவிகள் 408 இருந்தபோதிலும் சிறப்புத்தரப் பதவிகள் 43 மாத்திரமே உண்டு. பொது எழுதுவினைஞர் சேவையில் 1243 முதலாம் வகுப்புப் பதவிகளுக்கு 215 சிறப்புப் பதவிகள் உண்டு. சிறப்புப் பதவிகளின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதில் எவ்வித விகிதாசாரமும் கிடையாதென்பதை ஏற்றுக்கொள்கிறோம். இருப்பினும் பெ. எ. வி. சேவையிலுள்ள சிறப்புத்தரப் பதவிகளின் 1957ம் ஆண்டு முதல் 5:1 என்ற விகிதப்படி அவ்வப்போது கூடியுள்ளது. அஞ்சலதிபர்கள் சேவையில் இவ்விகிதம் 9:1 ஆக இருக்கிறது. பதவி உயர்வுக்கு வாய்ப்புகள் இல்லாததினால் சம்பளம் தேங்கும் என்ற பயமும், மற்றச் சேவைகளில் உள்ளதுபோல் வாய்ப்புகள் இல்லையென அதிருப்தியும் ஏற்பட்டுள்ளது. இந்நிலை ஒரு முக்கிய சேவையிலுள்ள மேற்பார்வையாளர் மனதில் ஏற்பட்டிருப்பது அச்சேவையின் வினைத் திறமைக்கு உகந்ததல்ல. எனவே சிறப்புப் பதவிகளை 80 ஆக உயர்த்தவும். இவ்விதம் செய்தால் மற்றச் சமமான சேவைகளிலிருக்கும் விகிதத்திற்கும் சமமாகும் அல்லது முதலாம்வகுப்பையும், சிறப்புத் தரத்தையும் இணைக்கவும்.

1912ஆம் ஆண்டு ஸ்லோட்டர்-ஸ்டிவன்சன் குழு முதல் 1946ம் ஆண்டு குணத்திலக்கா ஆணைக்குழுவரை எல்லா குழுக்களுக்கும் தபால்-தந்தித் தொடர்புத் திணைக்களத்தில் உள்ள மூன்று முக்கிய நடுத்தரப் பகுதி ஊழியரின், அதாவது அஞ்சலதிபர்கள் சேவை, தபால் எழுதுவினைஞர் சேவை, தந்தித் தொடர்புச் சேவை ஆகியோரின் சம்பளங்களை நிர்ணயிப்பதில் பொதுவான ஒரு கொள்

டாம் வகுப்பு எழுதுவினைஞரின் மிகக் குறைந்த அடிப்படைச் சம்பளத்தைவிட இரு ஏற்றங்களால் அதிகரித்தது. அஞ்சலதிபர்களைப் பொறுத்தமட்டில் மூன்றும் வகுப்பை ஒழித்ததுடன், மூன்றும், இரண்டாம் வகுப்பு எழுதுவினைஞர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தின் இணைந்த சம்பளத்தை இரண்டாம் வகுப்பு அஞ்சலதிபர்களுக்குக் கொடுத்தது. 1953ஆம் ஆண்டு, போலியர் ஆணைக்குழு இரண்டாம் வகுப்பு அஞ்சலதிபர்களுக்கும் மூன்றும் வகுப்பு எழுதுவினைஞர்களுக்கும் ஒரே தொடக்க அடிப்படைச் சம்பளத்தை 960 ரூபாய் வருடத்திற்குக் கொடுத்தது.

லும், அது உடல் நலத்தையும், உள நலத்தையும் பாதிப்பதால் அவர்களின் ஓய்வு நேரமும், பணமும் வீணாகிறது என்பதை அறிவதாலும் இது வரையறுக்கப்படாத வரையறுக்கமுடியாத சேவை. அதாவது ஓர் எழுதுவினைஞர், தொழில் நுட்ப ஊழியர், காசாளர் ஆகிய மூவரின் வேலைகளைத் தன்னகத்தே கொண்டது என்பதைத் தெரிந்துகொள்வதாலும், இது ஒரு சிறப்புத் தேர்ச்சிவாய்ந்த பலதரப்பட்ட சேவையென்பதை அறிந்து, கவர்ச்சியான சம்பளத்தைக் கொடுக்காததாலும் கடந்த பத்தாண்டுகளில் இவ்வேலைக்குப் போதியளவு ஆட்களைச் சேர்க்கமுடியவில்லை.

## மீலாத் விழா வருடாந்த மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

2-3-69 புதன்கிழமை இரவு 10 மணியளவில், யாழ். வண்ணை மேற்கு அரசினர் முஸ்லிம் வித்தியாலய அதிபர் ஜனாப் எம். எச். எம். அப்துற்றஸ்ஸாக் தலைமையில் மஸ்ற உத்தீன் பாடசாலை மண்டபத்தில் வருடாந்தக்கூட்டம் ஆரம்பமாகியது. ஜனாப் எம்.எச். எம். அப்துற்றஸ்ஸாக் 'கிருஅத்' ஓகினார். அதையடுத்து தலைவர் தமது முன்னுரையில் பெருமானார் றசூலேகரீம் (ஸல்) அன்னைப் பெறும் ஒரு வழி, அன்னார் பேரிலே 'மௌலூத்' ஓதி (புகழ்பாடி) கந்தூரி (அன்னதானம்) வழங்குதலால் இவ்வருடமும் கந்தூரி நடத்துவது பற்றிச் சபையோரிடம் ஆலோசனை வேண்டினார். இவ்வருடமும் கந்தூரி நடத்துவதென ஏகமனதாகக் கூறினர்.

இதையடுத்து, கௌரவ காரியதரிசி அல்ஹாஜ் எம். ஏ. எச். ஜுனைத் சென்ற வருட அறிக்கை வாசித்துச் சபையோரால் அங்கீகாரமளிக்கப்பட்டது. பின்னர் ஏ. சீ. எம். மரிக்கார் வரவு-செலவு அறிக்கையை வாசித்தார். சபையோரால் வரவேற்கப்பட்டது.

சங்கத்தில் அங்கத்தவராக இருந்து நல்லுதவி புரிந்து தேகவியோகமான மர்ஹூம்களான என். எம். சுல்தான். எம். எம். சுல்தான் மூஹியித்தீன், எம்.எம். லெப்பை ஆகியோர்களுக்காக, 'கத்தம் ஓதி'ப் பிரார்த்தித்து ஆத்மசாந்தி வேண்டப்பட்டது.

பின்னர் புதிய வருட உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

அல்ஹாஜ் எம். ஏ. எம். ஜுனைத் தலைவராகவும், ஜனாப் எம். எஸ். எம். சாகுல்கமீது உப-தலைவராகவும், ஜனாப்களான எம் எஸ் எம். பஸீர், ஏ. சி. எம். மரைக்காயர் இணைக் காரியதரிசிகளாகவும், அல்ஹாஜ் எம். எம். உமார் அப்துல் காதர் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

ஜனாப்களான எம். எச். எம் அப்துற்றஸ்ஸாக், எம். எம். முகைதீன், அல்ஹாஜ் எம். அப்துல் அஸீஸ், எஸ். எம். மஃமூது, எம். எல். ஏ. காதர். எம் எஸ். சஹாப்தீன், எம். ஏ. மீராசாஹிபு, எம். கே. எஸ். அப்துல் காதர் ஆகியோர் நிர்வாக அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். ஈற்றிலே சலவாத்துடன் கூட்டம் இனிது முடிவடைந்தது. (மு. நி.)

பண்டத்தரிப்பு, புதன்

ஈஸ்டர் திருநாளையொட்டி உரும்பராய் புனித மிக்கேல் ஆலய முன்றலில் 'அன்பில் மலர்ந்த அமரகாவியம்' என்னும் இசைஉரை நாடகம் திருமறைக்கழக மன்றத்தினரால் நடித்துக்காண்பிக்கப்பட்டது.

வல்ல ஓர் அருமையான மூலிகையாம்.

—வழிப்போக்கன்

சொல்வதற்கு புதிதாக ஏதாவதொரு மருந்தை கண்டுபிடிக்கவேண்டியிருக்கிறது.

(7-ம் கலம் பார்க்க)

உள்ளூராட்சிமன்ற

## சித்த ஆயுர்வேத வைத்தியர் சங்க அறிக்கை

சுழிபுரம், வியா.

''உள்ளூராட்சி மன்றங்களால் நடாத்தப்படும் இலவச சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகள் ஏறக்குறைய பத்தளவில் இவ்வருடத்தில் நிதி நிலைமை இன்மை குறித்து மூடவேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. எம் சங்கம் சுகாதார அமைச்சரையும், அயுர்வேத ஆணையாளரையும் சந்தித்து நிலைமைகளை விளங்கப்படுத்தி ஐந்து சித்த ஆயுர்வேத வைத்திய சாலைகளுக்கு இந்நிதி ஆண்டில் அரசாங்க நன்கொடை பெற்றுக் கொடுத்துள்ளது. இதனால் எந்த வைத்திய சாலைகளும் மூடப்படாது இயங்க முடிந்தன. இவ்விஷயத்தில் இலங்கை சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் சங்கமும் ஒத்துழைப்பு தந்தது குறிப்பிடத்தக்கது''

அகில இலங்கை உள்ளூராட்சிமன்ற சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் சங்க 4-வது வருடாந்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''இன்றுவரை முப்பத்தொரு அங்கத்தவர்களைக் கொண்ட இச்சங்கமானது, அகில இலங்கையிலுமுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் சித்த ஆயுர்வேத வைத்தியர்களை அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளது. இச்சங்கத்தின் காரியாலயம் வயாவிளானில் உள்ள மயிலிட்டிக் கிராம சபை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையில் அமைந்துள்ளது. எனினும் கூட்டங்களைக் கூட்டுவதற்கு வசதியாக கூட்டங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபை இலவச சித்தாயுர்வேத வைத்தியசாலையில் நடைபெற்று வருகின்றன. இவ்வருடம் நான்கு நிர்வாகசபைக் கூட்டங்களும், ஐந்து பொது கூட்டங்களும் இரு விசேட கூட்டங்களும் வடபகுதி உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகருக்குப் பிரியாவிடைக் கூட்டமும், உள்ளூராட்சி அமைச்சர் திரு. ஆர். பிரேமதாசாவுக்கு வரவேற்புக் கூட்டமும் நடாத்தப் பெற்றன. இவ்வருடத்தில் எங்கள் சங்கமானது பல நற்கருமங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளது.''

ஆஸ்பத்திரியில்

## யாருமற்ற நிலையில் பிரசவத்தாய்பட்டபாடு?

புலோலி, வியாழன்

வடமராட்சியிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரி யொன்றில் பிரசவதாய் ஒருவருக்கு ஏற்பட்டபயங்கர அனுபவம் குறிப்பிட்ட வார்ட்டில் சிகிச்சை பெற்றுவரும் மற்றைய பிரசவதாய்மாருக்கு பீதியை ஏற்படுத்தியுள்ளதாம்.

கடந்தவார இறுதியில் ஆஸ்பத்திரியில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் ஒரு சம்பவமே இதற்கு காரணமாகும்.

நெல்லியடியைச் சேர்ந்த ஒரு பெண் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் இரவில் சடுதியாக பிரசவவேதனையால் அவர் துடிதுடித்து மருத்துவமாதினதும் சக பெண் ஊழியர்களினதும் உதவியைக் கோரியபோது யாருமே உதவிக்குவரவில்லையாம்.

பிரசவத்தாய் மெதுவாக எழுந்து பக்கத்தேயுள்ள மலசல கூடத்திற்கு சென்றபோது குழந்தை பிரசவித்து மலசலம் கழிக்கும் வாளிக்குள் குழந்தை விழுந்து விட்டதாம். அதேநேரத்தில் இங்கு வந்து சேர்ந்த பெண் ஊழியர் ஒருவர் தக்கசமயத்தில் குழந்தையைக் காப்பாற்றினாராம்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு [illegible] 4 [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org